Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :43 மார்கழி 23 ஆம் நாள் புதன்கிழமை 08 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050




# கோத்தாவின் யாப்புக்கு கூட்டமைப்பும் ஆதரவு!

கொழும்பு, ஜனவரி 8

எமது மக்கள் அனைத்து மக்களினதும் பன்முகத்தன்மையையும் சமத்துவத்தையும் அங்கீகரிக்கும், ஒன்றிணைந்த பிரிபடாத பிரிக்கமுடியாத நாட்டுக்குள் தீர்வொன்றை எட்ட இன்னமும் தயாராக இருக்கின்றார்கள். அதனடிப்படையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கருத்தோடு நாம் உடன்படுகின்றோம். நாடு சுதந்திரமடைந்ததன் பிற்பாடு எமது சமூகத்தின் பன்முகத் தன்மையை அர்த்தமுள்ள வகையில் அங்கீகரிக்க முடியாமல் இருந்த பின்னணியை கடந்த 30 வருடங்களில் நாம் எடுத்து வரும் பல்வேறு சாதகமான நடவடிக்கைகளால் மாற்ற முயன்று வருகின்றோம். 25

## விபத்தில் சிக்கியவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.8

**விபத்தில் சிக்கிச் சிகிச்சை** பெற்றுவந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். யாழ்ப்பாணம், நாவாந்துறையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இரத்தினராஜா (வயது-41) என்பவரே உயிரி 04

## ஒரு காற்றாலையையே நகர்த்த முடியுமாம்!

யாழ்ப்பாணம், ஜன.8

தனங்கிளப்பு, மறவன்புலவில் பொருத்தப்படும் 8 காற்றாலைகளில் 2 காற்றாலைகளுக்கான இடத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று 04

## மைத்திரி வழி தனி வழி !

கொழும்பு, ஜன.8

பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் 04



## வீதியோரம் இளைஞனின் சடலம்!

வவுனியா, ஜன.8

வவுனியா, செட்டிக்குளம் மெனிக்பாம் பகுதியில் நேற்று அதிகாலை இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் அந்தப் பகுதியைச் சேர்ந்த பாண்டியன் நிரோஜன் (வயது-25) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் மனவளர்ச்சிகுன்றியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 04

## முற்பகல் சிறை: பிற்பகல் பிணை

கொழும்பு, ஜன.8

முறையற்ற கொடுக்கல் வாங்கலூடாக அரசுக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தனவுக்கு கொழும்பு நேற்று 3 ஆண்டுகள் சிறை விதித்தது. 04

## தடுக்கி விழுந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

தடுக்கி விழுந்து பாதிப்புக்குள்ளான முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள் 04

## கொலைச் சூழ்ச்சி: மறுத்தார் ரணில்!

கொழும்பு, ஜன.8

தன்னைக் கொலை செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார் என்ற 03

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்!

*நாவற்குழியில் பரிதாபம்*

சாவகச்சேரி, ஜன.8

பாதுகாப்பற்ற கிணற்றில் இருந்து 7 வயதுச் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டப் பகுதி 25

## கே.கே.எஸ். துறைமுக அபிவிருத்திக்கு "50"

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக 15 ஏக்கர் அரச காணியையும், 35 ஏக்கர் தனியார் காணியையும் கையகப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரம் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் துறைமு 04

## மருத்துவர் வெறியாட்டம்: மாணவிகள் வன்கொடுமை



அம்பாறை, ஜன. 8

அம்பாறை உஹண கோணாகொல்ல பகுதி சேனரத்புர பிராந்திய மருத்துவமனையில் மருத்துவர் ஒருவர், பாடசாலை மாணவிகள் நால்வரை 25

## ஷானி 'அவுட்'

கொழும்பு, ஜன.8

குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும், காலிப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட செயலராகக் கடமையாற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உடனடியாக 25







கல்வியங்காடு பொதுச்சந்தை

# வியாபாரிகள் கதவடைப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 8*

குத்தகைகாரரின் செயற்பாடுகளைக் கண்டித்து கல்வியங்காடுப் பொதுச் சந்தை வியாபாரிகள் நேற்றுக் கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


புதிதாகத் திறக்கப்பட்ட கல்வியங்காடு பொதுச் சந்தையைப் பொறுப்பேற்றுள்ள குத்தகைக்காரர், சந்தையை சுகாதார ரீதியாக ஒழுங்காகச் சுத்தம் செய்வதில்லை, அத்துடன் வரி அறவீட்டை இரு மடங்காக அதிகரித்துள்ளார்.

இந்தச் செயற்பாடுகளைக் கண்டித்தும், மாநகர சபை முதல்வர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று தெரிவித்தும் வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"இது அவர்களுக்கும், குத்தகைக்காரருக்கும் இடையிலான பிரச்சினை. அதை அவர்கள் பேசி சரி செய்ய வேண்டும். இதற்கிடையில் மாநகர சபை மீது ஏன் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. மாநகர சபை மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது இப்போது எல்லோருக்கும் பழகிப் போய் விட்டது. சந்தையை சில நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகைக்கு விட்டுள்ளோம். அதைக் குத்தகைக்கு எடுத்தவர், நிபந்தனைகளை மீறியிருந்தால் மாநகரசபை நடவடிக்கை எடுக்கும்" என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ. ஆனல்ட் பதிலளித்தார்.

கல்வியங்காடு பொதுச் சந்தைக்குப் புதிதாகக் கட்டடம் அமைக்கப்பட்ட நிலையில், வியாபாரிகள் வெற்றுக் காணி ஒன்றில் தற்காலிகமாகக் கடந்த காலங்களில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். கடந்த மாதம் புதிய கட்டடம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒருவாரத்திலேயேபிரச்சினைகள் உருவெடுத்துள்ளமையால், வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-21,20,9)

# என்னைக் கொல்ல துப்பாக்கிப் பயிற்சி



## ரஞ்சன் ராமநாயக்க எடுத்துள்ளார் என மஹிந்தானந்த சபையில் தெரிவிப்பு

***கொழும்பு, ஜன. 8***

**முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க என்னைக் கொலை செய்வதற்காக துப்பாக்கி சுடும் பயிற்சி எடுத்துள்ளார். இது படுபயங்கர மான செயலாகும். எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கையை முன்னெடுங்கள்.**

இவ்வாறு சபாநாயகர் கருஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும், பிரதியமைச்சராக இருந்த ரஞ்சன் ரா்மநாயக்கவுக்குமிடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் தொடர்பான குரல்பதிவு தற்போது சமூகவலைத்தளங்களில் பரவிவருகின்றது.

மஹிந்தானந்தவை கொலை செய்வதற்கு துப்பாக்கிச்சுடும் பயிற்சி எடுக்கின்றேன் என்று ரஞ்சன் ராமநாயக்க ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறும் பதிவும் அதில் இடம்பெற்றுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கை முன்னெடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவும் பதில் வழங்குகிறார்.

எனவே, என்னைக் கொலை செய்வதற்காகரணில்விக்கிரமசிங்கவும், ரஞ்சன்ராமநாயக்கவும் இணைந்து சூழ்ச்சி செய்தமை உறுதியாகியுள்ளது. இது படு பயங்கரமான செயலாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் கடந்த பெப்ரவரி மாதம் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றது. ரஞ்சன் ராமநாயக்க பயிற்சியில் ஈடுபடும்போதுதான் இந்த சம்பவம் இடம்பெற்றது. தவறுதலாக நடந்தது என்று பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு கூறுமாறு ரணில் விக்கிரமசிங்கவே ஆலோசனை வழங்கியுள்ளார்.


இதற்கு எதிராக நாளை (இன்று) சி.ஐ.டி. மற்றும் பொலிஸாருக்கு முறைப்பாடுசெய்து சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளேன். இதற்கு இணையாக சபாநாயகர் என்ற வகையில் நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், விடயம் கவனத்தில் எடுக்கப்படும் என்று அறிவித்தார். (ஒ.5,44)

# சுதந்திர தின நிகழ்வுக்கு சிங்களத்தில் சுற்றறிக்கை

*யாழ்ப்பாணம்,ஜன.8*

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு, தனிச்சிங்களத்தில் சுற்ற றிக்கையை அரசு வெளியிட்டுள்ளது. தனிச் சிங்களத்தில் முதற்கட்டமாக வெளியாகியுள்ள இந்தச் சுற்றறிக்கையின்படி சுதந்திர தின நிகழ்வுகள் அனைத்து அரச திணைக்களங்களிலும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.



தொடர்ந்து சுதந்திர தின உரை, மரநடுகை, சிரமதானம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து மாவட்டங்களினதும், மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு மேலதிக விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அரச அலுவலகங்கள் அனைத்தும் அலங்கரிக்கப்பட வேண்டும் என்றும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தில் சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, தனிச் சிங்கள மொழியில் சுற்றறிக்கை அனுப்பி`வைக்கப்பட்டுள்ளது. (க-121)

# கூட்டுறவு சங்கங்களால் நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெய்த கடும் மழையால் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், தொழில் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில், சங்கங்கள் தமது நிதியில் இருந்து அதற்கான உதவிகளை வழங்கி வருகின்றன.

வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் இரண்டாயிரத்து 500 ரூபா பெருமதியான உலர் உணவுப் பொதி ஒவ்வொருவருக்கும் விநியோ கிக்கப்படுகிறது. (க-17)

# தமிழ் பேசும் நீதிபதிகள் நால்வருக்கு இடமாற்றம்

*யாழ்ப்பாணம், ஜன. 8*

மன்னார் மேல்நீதிமன்ற நீதிபதி உட்பட தமிழ்பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் நால்வருக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபில் என். எம். மொகமெட் அப்துல்லாஹ் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸர்தீன், கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன், காலி மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் சஹாப்தீன், மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவர் வவுனியா குடியியல் மேல்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதியாகவும் பணிபுரிவார்.

அத்துடன், கொழும்பு மேல் நீதிமன்ற (இல.5) நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், நீர்கொழும்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார் என்று நீதிமன்றத் தகவல்கள் தெரிவித்தன. (த)

# சந்திரிக்கா சென்றதால் சு.க. கூட்டத்தில் குழப்பம்

**கொழும்பு, ஜன.8**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து கொண்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால் அமைதியின்மை ஏற்பட்டது. அதனால் கூட்டம் இடை நிறுத்தப்பட்டது.**

இந்த கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் தலைமையில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அமைதியற்ற நிலை ஏற்பட்டதால் மைத்திரிபால சிறிசேன அங்கு வரவில்லை என்றும் கூறப்பட்டது.

சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்ட பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் இது தொடர்பில் கேட்கப்பட்டபோது அவர் தெரிவித்ததாவது

சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் கூட்டத்துக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கவை வெளியேற்றியதாக கூறப்படுவது தொடர்பில் எனக்கு தெரியாது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் கூட்டத்தில் கலந்துக் கொள்ளச் சென்றபோது அவர் அங்கிருக்கவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் செயற்குழு எடுத்த தீர்மானத்திற்கு எதிராக அவர் செயற்பட்டிருந்தார். ராஜபக்சக்கள் மீது கொண்டிருந்த தனிப்பட்ட கோபம் காரணமாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரமதாசவுக்கு ஆதரவுவழங்கஅவர்தீர்மானித்திருந்தார்.

சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானம் தொடர்பில் கட்சியின் அமைப்பாளர்களுக்கு அறிவுறுத்தியிருந்த போதிலும் அவர்களில் சிலரும் சந்திரிகாவுடன் இணைந்து செயற்பட்டனர். ஆனால் எமது கட்சியின் ஆதரவாளர்கள் செயற்குழுவின் தீர்மானத்துக்கே இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பது தேர்தல் முடிவுகளின் பின்னர் உறுதியாகியுள்ளது.

கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக சந்திரிகா செயற்பட்டமையினாலேயே தொகுதி அமைப்பாளர்கள் மத்தியில் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கலாம். யாராக இருந்தாலும் கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்டால் இவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்கப்படுவது வழமையே.

இதேவேளை கடந்த காலத்தில் செயற்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்ட கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றார். (எ)

## மணல் கடத்தலை தடுக்க சிறப்புக் குழு களத்தில்

வடமராட்சி, குடத்தனை, பொற்பதி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படும் நோக்குடன் சிறப்புப் பொலிஸ் குழு ஒன்று களமிறக்கப்பட்டுள்ளது என்று காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில்சி.டபிள்யூ. சேனாதிர தெரிவித்தார்.

வடமராட்சி, குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கச் சென்ற பொலிஸார் மீது நேற்றுமுன்தினம் இரவு கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இனந்தெரியாதோர் வீதிகளில் தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

அதையடுத்து அந்தப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறப்புப் பொலிஸ் குழு களமிறக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸார் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழு அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக ரோந்துப் பணிகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## வீதி விபத்தில் பெண் காயம்

பட்டாரகவாகனமும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்கு ள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்பாக இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-110)

## நம்ப முடியவில்லை

### பொன்சேகா கூறுகின்றார்



கொழும்பு, ஜன.8

சுவிஸ் தூதரக பெண் அதிகாரியை கடத்தவில்லை என அரசுமும் பொலிஸாரும் கூறுவதை உண்மையென இன்னமும் நம்ப முடியாதுள்ளது. நல்ல வேலையில் இருக்கும் பெண், குடும்பம் பிள்ளைகள் என இருக்கும் பெண் அதிகாரி ஒருவர் புதிய அரசு உருவாக்கப்பட்ட 10 நாள்களில் தனது உயிர், குடும்பம், பிள்ளைகளின் உயிரைக்கூட பொருட்படுத்தாது அவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைப்பாரா?

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சுவிஸ் தூதரக பெண் அதிகாரியின் கடத்தல் விடயத்தில் வெள்ளை வான் கடத்தல் இடம்பெறவில்லை, அவர் அச்சுறுத்தப்படவில்லை என அரசும் பொலிஸாரும் என்னதான் கூறினாலும் அரசு கூறுவது உண்மையென இன்னமும் மனசாட்சிக்கு ஏற்ப நம்ப முடியாது உள்ளது. அவ்வாறு நடக்கவில்லை என்றால் அதனை நிரூபிக்க அரசு சரியான காரணிகளை முன்வைத்திருக்க வேண்டும்.

ஒரு நல்ல வேளையில் இருக்கும் பெண், குடும்பம் பிள்ளைகள் என இருக்கும் பெண் ஒருவர் புதிய அரசு உருவாக்கப்பட்ட 10 நாள்களில் தனது உயிர், குடும்பம், பிள்ளைகளின் உயிரைக்கூட பொருட்படுத்தாது இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைப்பாரா?. அதுவும் இவர்களின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் நன்றாக தெரிந்த ஒருவர் அவ்வாறு முறைப்பாடு ஒன்றினை செய்வாரா?. என்றார். (எ)

பிணை முறி அறிக்கை:

## எம்.பிக்களுக்கு தேவையில்லை

*சட்டமா அதிபர் சபாநாயகருக்கு ஆலோசனை*

கொழும்பு, ஜன.8

மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பான தடயவியல் கணக்காய்வு அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டாம் என்று சட்டமாஅதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பு வேளையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய வங்கி திறைசேரிமுறி தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வின் அறிக்கையை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது தற்போது பொருத்தமற்றது என சட்ட மா அதிபரால் எனக்கு எழுத்துமூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியால் வழங்கப்படும் திறைசேரிமுறி தொடர்பில் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்திலும் சட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்படலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் தடயவியல் கணக்காய்வு அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது பொருத்தமற்றது என சட்டமா அதிபர், எனக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.என்றார்.

தடயவியல் கணக்காய்வு அறிக்கையை சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கடந்த ஜனவரி 3ஆம் திகதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளப்படும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார். (எ44)

### கொலைச்...

இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் குற்றச்சாட்டை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடியோடு நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. அதில் சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, "முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க என்னை கொலை செய்வதற்காக துப்பாக்கிசூடும் பயிற்சி எடுத்துள்ளார். இருவரின் சூழ்ச்சி திட்டமும் தொலைபேசி உரையாடல் குரல் பதிவுமூலம் அம்பலமாகியுள்ளது." - என்று குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடியோடு நிராகரித்தார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமங்க தெரிவித்ததாவது:

இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே எனது பெயரைப் பயன்படுத்திக் குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்தார். நான் அவ்வாறு சூழ்ச்சி செய்யும் நபர் கிடையாது. நாடாளுமன்ற உறுப்பினர் உதயசாந்த அன்று எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியிருந்தேன். நாடாளுமன்ற ஹென்சாட்டிலும் அது இருக்கின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவின் மாதிவெல வீட்டிலிருந்துதான் இறுவட்டுகளைப் பொலிஸார் எடுத்தனர். ஆனால் தற்போது அவை பொது சொத்துப் போன்று அனைத்து இடங்களிலும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து, இறுவட்டுகளை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் சபாநாயகருக்கு தெரியப்படுத்தவும்.என்றார்.

ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்னே அவைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். அவர் ஊடாகவே சபாநாயகரிடம் இந்தக் கோரிக்கையை ரணில் முன்வைத்தார்.(எ

## விபத்தில்...

ழுந்தார்.
இவர் கடந்த 3ஆம் திகதி சைக்கிளில் இருந்து விழுந்து காயமடைந்துள்ளார். வீட்டில் சென்று படுத்தவர் சுவாசிக்கச் சிரமப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனையில் சேர்க்கப் பட்டார்.
அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறே மகுமார் மேற்கொண்டார். (எ-26)

## வீதியோரம்...

நேற்று அதிகாலை மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் உள்ள மெனிக்பாம் பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையில் இளைஞர் ஒருவரின் சடலம் இருப்பதை அவதானித்துப் பொதுமக்கள் பறயனாலங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு செட்டிகுளம் மருத்துவ மனையில் ஒப்படைத்தனர்.
வீதியில் சென்ற வாகனம் இந்த இளைஞரை மோதியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பறயனாலங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-110)

## மைத்திரி...

ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஆலோசனை நடத்துகின்றார்.
இது தொடர்பாகக் கட்சி அமைப்பாளர்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளவும் அவர் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவையில் உரிய இடம் அளிக்கப்படாமை, பொதுத் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தில் மட்டுமே போட்டியிட வேண்டும் என்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றமை என்பவை தொடர்பாக மைத்திரிபால சிறிசேன கடும் அதிருப்தியில் உள்ளார் என்று அறிய முடிகின்றது.
அதனால் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுப் பின்னர் பெரும்பான்மை பெறும் தரப்புக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்குவது தொடர்பாக மைத்திரிபால சிறிசேன ஆலோசித்து வருகின்றார் என்று கூறப்படுகின்றது. (எ)


### கண்ணீர் அஞ்சலி




யாழ் மாவட்ட செயலக நிதி முகாமைத்துவ பிரிவின் பிரதம முகாமைத்துவசேவை உத்தியோகத்தர் **திருமதி ஜெயந்தி ஜெகசீலன்** அவர்களின் தந்தை
**வேலுப்பிள்ளை சாதசிவம்** அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரும் அடைகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

பிரதம கணக்காளர், கணக்காளர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்கள், நிதிக்கிளை பெறுகை அலகு, களஞ்சிய நலன்புரிக்கிளை
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

### மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 03 . 1947



மறைவு
06 . 01 . 2020

### தேவதாஸ் மரியநாயகம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

இலந்தையடி வீதி, உடுவில் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாஸ் மரியநாயகம் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) 06.01.2020 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தேவதாஸ் தேவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி எல்சின் நிர்மலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி இராக்கினிதேவி, ஜோர்ஜ் கிங் மற்றும் ஜோர்ஸ்டியூக், தேவநேசராணி, அருட்சகோதரி பற்றிமா நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜேன் ஒஸ்ரினி (ஜேர்மனி), ஜோன் சக்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்),ஜோன்றைடின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய்) ஜோன்ஸ் ருவேட் (ஜேர்மனி), ஜேன் யாழினி (ஆசிரியர் - ஏழாலை சிறி முருகன் வித்தியாலயம்), டேன்பைரன் (நெல்சன் - முகாமைத்துவ உதவியாளர் புவிச்சரிதவியல் திணைக்களம்), ஜெயப்பிரதீப் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பியூட் (ஜேர்மனி), அனஸ்ரிகா (ஆசிரியர் - வட்டு மத்திய கல்லூரி), றொசானி, சிந்துஜா, கிருஷ்ணகுமாரன், திரிசினி, அயந்தா (ஆசிரியர் - காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பிற்பகல் 1.30 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 11190)(14.17) **தகவல்: குடும்பத்தினர்.**


## தடுக்கி...

ளார்.
யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த, பிரான்ஸில் வசிக்கும் நல்லையா பாலேஸ்வரன் (வயது-70) என்பவரே உயிரிழந்தார்.
பிரான்ஸில் இருந்து விடுமுறையில் குடும்பமாக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் கடந்த 2ஆம் திகதி தூக்கத்தில் இருந்து எழுந்தபோது தடுக்கிக் கீழே விழுந்துள்ளார். அதனால் இடுப்புப் பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அவர் சிகிச்சை பயனின்றி இன்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.(எ-26)

## ஒரு...

மக்கள் கோரிய போதும், ஒரு காற்றாலையை மாத்திரமே மாற்றியமைக்க முடியுமென நிறுவனம் தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைப் பரப்புக்குள் ஏ32 வீதியில், அறுகம்பவெளிக் கிராமத்தில் உருவாக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் கோயிலாக்கண்டி கிராமத்தின் எல்லை வரை நீள்கின்றது. அந்தப் பகுதியில் அமைக்கப்படும் காற்றாலைகளால் தங்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் போராட்டங்கள் நடத்தியிருந்தனர்.
இது தொடர்பாகச் சிலர் கைது செய்யப்பட்டு வழக்கும் நடைபெற்று வருகின்றது.
இந்த விடயம் தொடர்பாக நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபையினர், காற்றாலை நிறுவனம், இலங்கை மின்சார சபை, சுற்றுச் சூழல் அதிகார சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும், யாழ். பல்கலைக் கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவினரும் கலந்து கொண்டனர்.
இதில் பலதரப்பட்ட கருத்துக்கள் பறிமாறப்பட்டன. இறுதியில் மேற்கண்ட முடிவை குறித்த நிறுவனம் அறிவித்த போதும், இணக்கம் காணப்படாமலே கூட்டம் நிறைவுற்றது. (எ-159,105)

## முற்பகல்...

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக சரண குணவர்தன செயற்பட்ட 2007ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 3 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதன. இதற்கு 9 லட்சத்து 60 ஆயிரம் ரூபா வீதம் முறையற்ற விதத்தில் வரி செலுத்தியமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தீர்ப்புக்கு எதிராக அவரது சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்தனர். அதையடுத்து அவருக்கு நீதிமன்று பிணை வழங்கியது. (எ)

## கே.கே.எஸ்...

கப் பாவனையில் கொழும்பு, திருகோணமலை, காலி ஆகிவற்றுக்கு அடுத்ததாக காங்கேசன்துறை துறைமுகம் உள்ளது.
கொழும்புத் துறைமுகம் ஊடாக 46 வீதமும், திருகோணமலை துறைமுகம் ஊடாக 39 வீதமும், காலித் துறைமுகம் ஊடாக 15 வீதமும் பயன்பாடு இடம் பெறும் நிலையில் காங்கேசன் துறைமுகம் ஊடாக 2018ஆம் ஆண்டு தரவின் படி ஒரு வீதப் பயன்பாடுமே உள்ளது.
யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள துறைமுக அபிவிருத்திக்காகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தனது பரிந்துரைகளை வழங்கியிருந்தது. இந்தப் பரிந்துரை அறிக்கையானது மாவட்டச் செயலகம், நீரியல்வளத் திணைக்களம், வலி.வடக்குப் பிரதேச சபை, தெல்லிப்பளைப் பிரதேச செயலகம் என்பற்றில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது.
துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கும் நோக்கில் துறைமுகக் காணிக்கும் மேலதிகமாக 15 ஏக்கர் அரச காணியையும், 35 ஏக்கர் தனியார் காணியையும் கையகப்படுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை துறைமுக அபிவிருத்தி அமைச்சு சமர்ப்பித்துள்ளது.
15 ஏக்கர் அரச காணியானது ஏற்கனவே துறைமுகம் அமைந்துள்ள 5 ஏக்கர் மற்றும் அதனுடன் இணைந்த நடைபாதைகள் உள்ளிட்ட நிலப்பரப்பை உள்ளடக்கியபோதும், அதற்கான ஆவணங்கள் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையிடம் இல்லை என்றும், மற்றைய 35 ஏக்கர் நிலப்பரப்பு காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்குரியது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-105)


### மணிவிழா வாழ்த்து

(08.01.2020)



அகவை அறுபதில் அகம் சிறந்து மணிவிழா காணும்
எங்கள் அன்பான ஆசிரியர்
**திருமதி**
**சூரியகலா வரதராஜன்**
(Science Trained - SLTS 1)
அவர்களை உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.
Best Wishes

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| 1985.04.16 | - 1988.01.06 | கொ/இசிப்பதான மகா வித்தியாலயம் |
| 1988.01.07 | - 1989.12.31 | யா/பலாலி ஆசிரியர் கலாசாலை |
| 1990.01.01 | - 1994.01.05 | யா/ கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் |
| 1994.01.06 | - 2008.01.08 | யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் |
| 2008.01.09 | - 2020.01.07 | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் |

**பாடசாலை சமூகம்**
**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்**

# இன, மத வாதத்தைக் கிளறுவது ஒருமைப்பாட்டுக்கு பேராபத்து!

## கன்னி உரையில் சுட்டிக்காட்டினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜன. 8

இனவாதத்தையும், மதவாதத்தையும் அரசியல் ஆயுதமாக்கி சமூகத்தில் இந்த இரு விடயங்களும் கிளறப்படுமானால் நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பாதுகாக்க முடியாது. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் கொள்கை வகுக்கும்போது அனைத்து விடயங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரை தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிலேனியம் சவால் ஒப்பந்தத்துக்கு எதிராகக் குரல் எழுப்பிய தற்போதைய ஆளும்கட்சி உறுப்பினர்கள், இலங்கையின் சுதந்திர தினத்தன்று உடன்படிக்கையைக் கிழித்தெறிய முன்வர வேண்டும். அதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

இலவசமாக உரம் வழங்கப்படும், தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்த்தப்படும் என பல உறுதிமொழிகளை தேர்தல் பரப்புரைக் காலத்திலும், ஆட்சியேறிய பின்னரும் இந்த அரசு வழங்கியுள்ளது. 69 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு அரசால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அவற்றை நிறைவேற்றுவதற்கு மார்ச், ஏப்ரல் மாதம்வரை காத்திருக்கவேண்டியதில்லை. அடுத்தவாரம் வேண்டுமானால் நிதி அறிக்கையை சபையில் முன்வைத்தால் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கான ஆதரவு வழங்கப்படும்.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமையளிப்பதே அரசின் முதன்மைக் கொள்கையெனக் கூறப்பட்டது. தேசிய பாதுகாப்பு என்பது இராணுவ பாதுகாப்பு மட்டுமல்ல, அரசியல், சமூகம், பொருளாதார பாதுகாப்புத் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இனவாதத்தையும், மதவாதத்தையும் அரசியல் ஆயுதமாக்கி இரண்டு விடயங்களையும் கேந்திரமாகக் கொண்டு இனவாத - மதவாதத் தீ மூட்டப்படுமானால் நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பாதுகாக்க முடியாது. தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக கொள்கை வகுக்கும்போது அனைத்துத் துறைகள், பக்கங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் பரப்புரையின்போது சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. மிலேனியம் சவால் உடன்படிக்கையானது ஆபத்தானது, தேசத் துரோகமானது என்றெல்லாம் கூறினார்கள். மிலேனியம் சவால் உட்பட நாட்டுக்கு ஆபத்து எனக் கூறப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் கிழித்தெறிய வேண்டும் என்ற யோசனை முன்வைக்கின்றேன்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியே அதற்கு பொருத்தமான நாளாகும். இந்தத் தினத்தில் ஒப்பந்தங்களை கிழித்தெறியுமாறும் அதற்கு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

- என்றார். (எ-44)

STUDY, WORK & SETTLE IN
CANADA
GERMANY
FRANCE
LATVIA
EUROPE
செல்ல வழிகாட்டல்
BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
BANK BALANCE
(NO IELTS)
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM
ROYAL EDUCATION SERVICE
128 JAMPETTAH STREET, COLOMBO 13
0777 911 649 / 0777 216 291
குறைந்த செலவில், விரைவில் பயணம்.



உங்களை முதலீடு செய்யுங்கள் !

கொமர்ஷல் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (CLC) எனும் நாங்கள் வெறுமனே ஒரு தொழில் வாய்ப்பை வழங்கவில்லை. ஒரு தொழிலை வழங்குகின்றோம். இத்துறையில் முன்னோடியான வளர்ச்சிப்பாதையில் உள்ள நிறுவனத்தின் அங்கத்தவராகி உங்கள் ஆளுமையை அடையாளப்படுத்துங்கள். எம்முடன் இணைந்து உங்கள் ஆற்றலை கண்டறிய வாருங்கள்.

குத்தகை சந்தைப்படுத்தல் – அமைவிடம் : யாழ்ப்பாணம் –நெல்லியடி மற்றும் கிளிநொச்சி

பதவியின் தன்மை

- நிறுவன சகல உற்பத்திகளையும் மாதாந்த வருடாந்த இலக்குகளை நோக்கி அடைவதற்கான இணக்கத்தை ஒத்துக் கொள்ளல்.
- குறித்தொதுக்கப்பட்ட பெறுவனவுகள் , இலாபத்தன்மை , ஒதுக்கங்கள் மற்றும் NPL வீதங்கள் என்பவற்றை கம்பனி நடைமுறைக்கேற்ப பராமரித்து இலக்குகளை அடைதல்
- வெளியக வர்த்தக பங்காளர்கள் , வியாபாரம் ஆரம்பிப்பவர்கள் என்வற்றோடு வியாபார வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதோடு ஊக்கப்படுத்தி புதுவகை வியாபாரங்களை விஸ்தரிக்க வேண்டும் அத்துடன் எதிர்கால வியாபார வாய்ப்புகளையும் தோற்றுவிக்க வேண்டும். .
- வியாபார மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தி அவர்களை தக்க வைத்துக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் சுயவிபரங்கள்

- பாடசாலையை விட்டு விலகியவர்கள் 01 வருடத்திற்கு குறைந்த அனுவபம் உள்ளவர்கள் சந்தைப்படுத்தல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
- சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர்கள் 4 வருடத்திற்கு மேலான முன் அனுபவமும் கனிஷ்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர்கள் 2 வருடத்திற்கு மேலான நிதித்துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- வயது 35 க்கு கீழ்.
- G.C.E. A/L பூரணமாக சித்தியெய்திருத்தல் வேண்டும்.

நுண்நிதி சந்தைப்படுத்தல் உதவியாளர் ( யாழ்ப்பாணம் நெல்லியடி மற்றும் கிளிநொச்சி)

- நுண்நிதித்துறையில் 01 வருடத்திற்கும் மேலான அனுபவம்
- G.C.E. A/L வெற்றிகரமாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
- நல்ல தொடர்பாடல் திறனுடன் சுய ஆளுமை விருத்தி இருத்தல் அவசியம்
- பாடசாலையை விட்டு விலகியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரமும் இருத்தல்

விண்ணப்பதாரி சுயவிபரக்கோவையில் உறவினரல்லாத இருவரின் பெயர் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிட்டு நீங்கள் தெரிவு செய்துள்ள பதவியின் பெயரையும் குறிப்பிட்டு careers @clc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

The Recruitment Center, Commercial Leasing & Finance PLC
No. 68, Bauddhaloka Mawatha Colombo 04. Tel. 0114 526526 Ext.6327
(Mention the post you are applying on the left corner of the envelope)

CLC
COMMERCIAL
LEASING & FINANCE

# அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 10.12.2019
செவ்வாய்க்கிழமை அன்று
காலமாகிய
**திருமதி**
**கனேசரத்தினம்**
**நவரத்தினம்**
**(குணவதி)**

மண்ணில் 17.11.1932 | விண்ணில் 10.12.2019

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (09.01.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இந்துக்கல்லூரி வீதி. பண்டத்தரிப்பில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**இந்துக்கல்லூரி வீதி,**
**பண்டத்தரிப்பு. 077 246 5876** (CS 30394)(14,17)

# 14ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24 . 06 . 1946
உதிர்வு 12 . 01 . 2006

**அமரர் சின்னத்தம்பி**
**நடராசா**
(ஓய்வுபெற்ற
சிறைச்சாலை உத்தியோகத்தர்)

ஆண்டுகள் பதினான்கு ஓடிவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் உயிர் உள்ளவரை அழியாது...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கச்சாய் வீதி, கொடிகாமம்.** **குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது மருந்தகத்தின்
மருந்தாளர்
**த.சிவானந்தன்**
அவர்களின்
அன்பு மனைவி
**திருமதி**
**கேதீஸ்வரி**
**சிவானந்தன்**
அவர்கள் காலமான
செய்தி அறிந்து பெரும்
அதிர்ச்சியும் கவலையும்
அடைகின்றோம்.
அன்னாரின்



குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தொவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**சூர்யா மருந்தகம்**
**பஸ்நிலையம், அச்சுவேலி.** (in.12237) (13.17)
**உரிமையாளரும்,**
**சக ஊழியர்களும்.**

# மரண அறிவித்தல்

## பொன்னையா நாகராசா



தோற்றம் 06.11.1941 | மறைவு 06.01.2020

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் காட்டுக் கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குழியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நாகராசா கடந்த (06.01.2020) திங்கட் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற செல்வராசாவின் சகோதரரும் தர்மகுலசிங்கம் அமரசிங்கம், காலஞ்சென்ற அதிகாரசிங்கம். மற்றும் இராஜேஸ்வரி செல்வரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் கயல்விழியின் அன்பு தந்தையும் கண்ணராஜ்யின்அன்பு மாமனாரும் ரித்திகாவின் பேரனும் கண்னையாவின் சம்மந்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2020) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**No 22, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,**
**சுண்டுக்குளி.**
**தகவல்: குடும்பத்தினர்**
**077 0170954**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் அவர்கள்**
**கௌரவ ஆளுநர் - வடமாகாணம்**

வடமாகாண கௌரவ ஆளுநராக தாங்கள் தமிழர்களின் முதல் பெண்மணியாக தெரிவு செய்யப்பட்டமை எமக்கும் எமது இல்லக் குழந்தைகளுக்கும் மட்டற்ற மகிழ்ச் சியினையும் மன நிறைவினையும் ஏற்படுத்தியுள்ளமையினையிட்டு உளம் கனிந்த எமது பாராட்டினை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். வடமாகாண மக்கள் அனைவரும் உயர்ந்த வாழ்வு பெற தாங்கள் தாயாக கரம் கொடுத்து காத்திடவும்.
தொடர்ந்து இப்பதவியில் நீடித்து தங்கள் சேவையில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசிவேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :* **தலைவர், பொன் நித்தியானந்தம்**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்.**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

# வளர்மதியின் கண்ணீர் அஞ்சலி



எமது கழக மூத்த உறுப்பினரான
**சு. மயில்வாகனம்** அவர்களின் மாமனாரான
**சுந்தரம் சின்னராசா**
கடந்த **(06.01.2020)** திங்கட்கிழமை
காலமானார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்**
**வளர்மதி சனசமூக நிலையமும்.**

சம்பியன்லேன். கொக்குவில் கிழக்கு.

# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி**
**உதயகுமார் மாதினி** அவர்களின்
அன்புத்தாயார்
திருமதி **கந்தையா கனகாம்பிகை**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப்பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்**
**யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி , இளவாலை**

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் நடனபாட ஆசிரியை
**திருமதி யோன்யாழினி கிருஷ்ணகுமாரன்**
அவர்களின் தந்தையார்
**தேவதாஸ் மரியநாயகம்**
கடந்த 06.01.2020 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரிக்கழகம்**
**யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.**
(CS 30472) (14.17)

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 05 . 1958



இறப்பு 06 . 01 . 2020

## இரத்தினராஜா டாக்டர் யோகானந்தராஜா

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தச்சன் தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராஜா புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகன் டாக்டர் யோகானந்தராஜா 06.01.2020 காலமானார்.
அன்னார் ஆசிரியை தங்கமலரின் (குனங்களப்பு அ.த.க. பாடசாலை) அன்புக் கணவரும், அபிராமி (யா/இந்து மகளிர் கல்லூரி), அபிராஜ் (யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா, இராஜேஸ்வரி, யோகராஜா, இராஜசோதி, இராஜகுமாரி, இராஜகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகராஜா, செல்லப்பா, கந்தசாமி, காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, செல்வநேசா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேந்திரராஜாவின் சகலரும், முத்துமலரின் மைத்துனரும், சுமலதா, சுதர்சினி, சுகிர்தா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2020) புதன்கிழமை முற்பகல் 11 .00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணை முருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தச்சன் தோப்பு,**
**கைதடி.**
**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 275 4491** (c 23037) (13.17)

# குற்றச்சாட்டுகள் பொய்யானவை

## கல்விப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன.08
"இலங்கை ஆசிரியர் சங்கம் எனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் ஆதாரமில்லாமல் பொய்யான குற்றசாட்டை சுமத்தியுள்ளது" என்று தெரிவித்துள்ளார் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம்.
வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அடாவடியாகச் செயற்படுவதாகக் கூறி, இலங்கை ஆசிரியர் சங்கம் கவனவீர்ப்பு ஒன்றை இன்று நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிலையிலேயே தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுதலித்துள்ளார் கல்விப்பணிப்பாளர். இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-
"ஆசிரிய தொழிற் சங்கங்கள் இணைந்த இடமாற்றச் சபையினால் தான் இடமாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டன. இந்த இடமாற்றத் தீர்மானத்தில் தற்போது குற்றஞ்சாட்டும் இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட 5 ஆசிரியர் சங்கங்கள் ஒப்பமிட்டு அங்கீகரித்துள்ளன. குறித்த இடமாற்ற சபையில் ஓர் ஆசிரியரது இடமாற்றம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப்பிரதிநிதி ஆட்சேபித்த போதும் பெரும்பான்மையோரது தீர்மானத்துடன் அவரது இடமாற்றம் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த 'ஆசிரியர் தனது இடமாற்றம் தொடர்பில் என்னுடன் கலந்துரையாடியதையடுத்து அந்தப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டுள்ளது. இடமாற்ற விடயத்தைக் கையாளும் முகாமைத்துவ உதவியாளர் திடீரென இறந்து போனதன் காரணமாக இன்னுமொரு முகாமைத்துவ உதவியாளரின் உதவியுடனேயே இந்த இடமாற்றக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டன. எனவே பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அனைத்து இடமாற்றக் கடிதங்களையும் அனுப்பிவைக்க முடியவில்லை.
அதையெல்லாம் மூடிமறைத்து வலிகாமம் வலயத்தில் முறையற்ற இடமாற்றங்களும் பழிவாங்கல்களும் இடம்பெறுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் உண்மைக்குப்புறம்பான குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளதுடன் அநாகரிகமான வார்த்தைகளில் அறிக்கை எழுதியிருப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (அ. ந)


# விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம் ஜன. 8
கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே 2020 ஆம் ஆண்டில் தரம் 6 ற்கு அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் அலுவலகத்தில் வழங்கப்படும் விண்ணப்ப படிவங்களை பெற்று எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணியிலிருந்து பி.ப 2 மணிக்குள் விண்ணபிக்குமாறு யா/இந்துக்கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். விண்ணப்ப படிவத்தை இணையத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பெற்று பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகவோ பாடசாலை அலுலகத்தில் ஒப்படைக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (ந)

## விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம் ரவுணில் உள்ள புத்தகசாலைக்கு
ஆண்/பெண் விற்பனையாளர்கள்
உடன்தேவை.
**072 287 5625/ 011 576 5331**

## மரண அறிவித்தல்கள்



### பிலிப்ஸ் யோசப் பாலேந்திரா

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்ஸ் யோசப் பாலேந்திரா 06.01.2020 அன்று கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்ஸ் சவரிமுத்து - திருமதி சபீனா பிலிப்ஸ் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - திருமதி மேரிதிரேசா நீக்கிலாப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திருமதி ஞானம்மாவின் அன்புக் கணவரும், மீரா, கயசிந்நீலா, ஜொணதன், கீத்தா, அனுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், லங்காதரன், பாஸ்கரன், சுபாஷினி, யூலியன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான ராஜேந்திரா, ஜெயவதி, மகிழ்வதி, புகழ்வதி யோகேந்திரா மற்றும் நரேந்திரா ஆகியோரின் அருமைச்சகோதரரும், கிறிஷானா, அந்தியா, டானியல், பியங்கா, ஜியன்னா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.01.2020 அன்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு இல.8, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாத சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No.8, குருசோ வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:குடும்பத்தினர்**

**077 361 8100, 021 222 6327** (cs.30471) (13.17)



### வேலுப்பிள்ளை சதாசிவம்
**(ஓய்வு நிலை தபாலதிபர்)**

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் 1ஆம் மைல் வீதி, கிராம்புவிலையும், ஜெகன்பவனம் மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சதாசிவம் (ஓய்வு நிலை தபாலதிபர்) நேற்று (07.01.2020) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லதம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பரமு, கார்த்திகேசு, நடராசா, விவேகானந்தன் மற்றும் கனகம்மா, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் ஜெயந்தி (பிரதம முகாமைத்துவ சேவை அலுவலகர் - நிதிக்கிளை மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), காந்தரூபன், துளசிதாசன் (உப அதிபர்- யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலயம், மட்டுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகசீலன் (ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி), அனோஜா, உதயகீதா (ஆசிரியர் - கிளி/ கனகாம்பிகை அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுஜா, அனுராகன், அனிஸ்கா, மாருதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2020) புதன்கிழமை மீசாலை இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"ஜெகன்பவனம்"**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(AC 1436)(14.17)

**077 285 0965 / 077 885 7236**

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் அருணகிரிநாதன்

(மலேரியா தடுப்புப்பிரிவு - சுகாதார பணிமனை, தெல்லிப்பழை)




நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் பொற்கலம் தம்பை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் குமரக் கோட்டம் கோண்டாவிலை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அருணகிரிநாதன் (மலேரியா தடுப்புப் பிரிவு - சுகாதார பணிமனை தெல்லிப்பழை) கடந்த (06.01.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் தவஞானறஞ்சிதமலர் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் (புனிதம்) அன்புக் கணவரும் சானுகாவின் (கோண்டாவில் இந்துக்கல்லூரி மாணவி) அன்புத்தந்தையும் சக்திமதி, தெய்வமதி, சற்குணநாதன், கேதாரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வலட்சுமி (கண்மணி), கமலாதேவி, உதயகுமாரன், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2020) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லமான பொற்கலம் தம்பையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 528 4790** **தகவல் : குடும்பத்தினர்**



### திருமதி கந்தையா கனகாம்பிகை

**தோற்றம்** 31.07.1940 **மறைவு** 07.01.2020

கோலாலம்பூர், மலேசியாவை பிறப்பிடமாகவும், மாரீசன்கூடல், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகாம்பிகை நேற்று **(07.01.2020)** செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற க.செந்தூரன் மற்றும் சி.ரேகினி (சமுர்த்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), உ.மாதினி (ஆசிரியர்- யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி), க.காசிநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செ.சுகந்தி, த.சிவலிங்கம் (கிளை முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ. சங்கம்), வீ.உதயகுமார் (ஆசிரியர்- யா/ இளவாலை ஹென்றியரசர் கல்லூரி), கா. நிருபா (கலாசார உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், ஊர்காவற்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சி.நர்த்தனா (பொறியியல்பீட மாணவி- பேராதனைப் பல்கலைக்கழகம்), சி.கஜணன், செ.சமீரணன், உ.அனந்தா, உ.ஆராதனா, கா.பிங்கலன், உ.கம்சனா, கா.சாத்வீகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(08.01.2020)** புதன்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டிவளை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாரீசன்கூடல்,**
**இளவாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 865 7007**

# கச்சதீவு உற்சவத்துக்கான ஏற்பாடுகள் துரித கதியில்


## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.8
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி நடக்கவுள்ளது. அதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில் 9 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டும் அதேயளவு பக்தர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். அவர்களுக்கான போக்குவரத்து வசதி, குடிதண்ணீர் வசதி என்பற்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இந்த ஆலயம் அமைந்துள்ள இடம் ஆழ் கடல் பகுதி என்பதால் ஆலய உற்சவத்துக்கு வழமை போன்று கடற்படையினரின் பங்களிப்பு முக்கியமானது. இலங்கையில் இருந்து பயணிக்கும் பக்தர்களுக்காக 6ஆம் திகதி முங்பகல் 11 மணி வரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து சிறப்புப் போக்குவரத்துச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அன்று காலை 6 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரைக்கும் குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவு நோக்கிய படகு சேவையும் நடைபெறும்.

கடந்த ஆண்டு பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டிருந்த போதும் அது முழுமையாக வெற்றியடையவில்லை. இந்த முறை பொலிந்தீன் விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். இந்தியாவில் இருந்து 3ஆயிரம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த உற்சவத்துக்காகக் தொடர்புபட்ட அனைத்துத்திணைக்களங்களும் அவற்றுக்கான ஏற்பாடுகுளை மேற்கொள்ளும். இவற்றுக்கான செலவினங்களை கிறிஸ்தவ விவகார அமைச்சிடம் இருற்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. என்றார்.(எ105,20)

## இலவசக் கருத்தரங்கு






2020 ஆம் ஆண்டு இலங்கை விவசாய கல்லூரியின் என்.வி.கியூ தர 5 க்கான நுழைவுப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு இடம்பெற்றது. விவசாயக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தால் கடந்த 5 ஆம் திகதி வவுனியா விவசாயக் கல்லூரியிலும் , 6 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் மற்றும் பரந்தன் விவசாயக் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெற்றன. (ஐ)

CELEBRATING OUR 33 YEAR ANNIVERSARY

இலங்கையில் முதல் தடவையாக



33% போனஸ் வட்டி கிடைக்கும்
வெளிநாட்டு நாணய சேமிப்புகள்

இலங்கை வங்கி வரலாற்றில் முதன்முறையாக உங்கள் அ.டொலர் கணக்கின் வட்டிக்கு, மேலதிகமாக 33% போனஸ் வட்டியினை வழங்குகிறது, Sampath FC Prime வெளிநாட்டு நாணய கணக்குகள்.

A.E.R. 4.05%

| PFCA/ BFCA/ FCBU தனிநபர் / FCBU வியாபாரம் | | | | போனஸ் வட்டி மீதான பண மீளப்பெறுகை நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| சரா.மீதி(USD) | ஆரம்ப வட்டி வீதம் | ஆரம்ப வட்டிக்கான போனஸ் வட்டி | உச்ச பட்ச வட்டி வீதம் | |
| 1000 - 9,999.99 | 3% | 0% | 3% | பண மீளப்பெறுகை நிபந்தனைகள் இல்லை |
| 10,000 - 49,999.99 | 3% | 33% | 3.99% | காலாண்டினுள் 1 பண மீளப்பெறுகை |
| 50,000 அல்லது அதற்கு மேல் | 3% | 33% | 3.99% | பண மீளப்பெறுகை நிபந்தனைகள் இல்லை |

Sampath FC PRIME வெளிநாட்டு நாணய கணக்குகள்

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

www.sampath.lk 0112 30 30 50

Sampath Bank Fitch Ratings A+(lka)

DentsuGrant



# அராலி ‘குறைகளின் கிராமமமா’?

**செல்வராசா ஶ்ருவான்ந்த்**
மூன்றாம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும்
அராலி எனும் சிறிய கிராமம் யாழ்ப்
பாணத்துக்கும் காரைநகருக்கும்
இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்
ளது.

இது கண்ணுக்கெட்டும் தூரங்க ளி
ளெல்லாம் வானைத் தொடுமள
வுக்கு உயர்ந்த பனைமரங்களும்
கண்ணுக்குக் குளிர்ச்சி அளிக்க
கூடிய பசுமையான வயல்வெளிக
ளும் குளிர்ச்சியான நீரோடைக்
குளங்களும் உயரமான கோபுரங்
களும் அமையப்பெற்ற சிறிய கிரா
மம். இங்கு 250 குடும்பங்கள்
வாழ்ந்து வருகின்றன.

இங்கு பரம்பரை பரம்பரையாக
இரத்த சொந்த உறவுமுறை
கொண்ட மக்களே வாழ்ந்து வரு
கின்றனர். பெரும்பாலான இந்துக்
களும், சொற்ப அளவிலான கிறிஸ்
தவ மக்களும் மதபேதமின்றி
வாழ்ந்து வருகின்றனர்.

### தொழில் வளம்

இந்தக் கிராமமக்களின் பிரதான
ஜீவனோபாயமாக விவசாயமே
காணப்படுகின்றது. கண்ணுக்கெட்
டிய தூரம் வரை கிராமத்தைச் சுற்றி
பச்சை பசேலென வயல் வெளிகள்
காட்சியளிக்கின்றன. இங்கு சிறு
போகம் மற்றும் பெரும்போகம் என
இரு போகத்தில் பயிர்ச்செய்கை
இடம்பெற்று வருகின்றது. ஆண்
தலைமைத்துவக் குடும்ப அமைப்பு
முறைகளே அதிகம் காணப்படு
கின்றன.

30 வீதமான மக்கள் அரச தொழில்
செய்பவர்களாக இருக்கின்ற அதே
வேளை 70 வீதமான மக்கள்
வயற்தொழில், தச்சு வேலை மற்
றும் மேசன் வேலை செய்பவர்களா
கவும் காணப்படுகின்றனர்.

### எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

இங்கு 250 குடும்பங்கள் வாழ்ந்து
வருகின்றன.

இவர்களுக்கான அடிப்படை வசதி
யான குடிதண்ணீர் முக்கிய பிரச்சி
னை யாகக் காணப்படுகின்றது.



முந்தைய காலத்தில் வீட்டுக்கி ணறே
குடி தண்ணீர்ப் பாவ னைக்கு பயன்
படுத்தப்பட்டு வந்தது. ஓரளவு ஆழ
மான கிணறுகள் நன்னீர் கிணறுக
ளாக வயல்களிலும் காணப்பட்டன.
கிணறுகளில் மக்கள் மண்குடங்
களை எடுத்துச் சென்று கப்பிகளில்
துலாக்களில்நீர் அள்ளும்நிலைமை
காணப்பட்டது.

காலப்போக்கில் இந்
நன்னீர் கிணறு
கள் உவர்நீ
ராக மாற்றம
டைந்துள்
ளன.

குறிப்பாக
குழாய்க் கிண
றுகளின் பாவ
னையே நீர்
மட்டம் உறிஞ்
சப்பட்டு உவர்த் தண்ணீராக நீர்
மாறுவதற்கு முக்கிய காரணமாக
இருந்தது. ஒரு நீர்த் தாங்கியின்
மூலமே இந்தக் கிராமத்திலுள்ள
அனைத்து மக்களுக்கும் குடி
தண்ணீர் குழாய்க ளின் வழியாக
வழங்கப்படுகிறது.

அதற்காக மாதாந்த கட்டணமாக
ரூபா 150 அரசால் அறவிடப்படு
கின்றது.

இங்கு காலை வேளை மாத்திரம்
6 தொடக்கம் 7 மணி வரையில்
குடிதண்ணீர் விநியோ கிக்கப்படுகின்
றது. ஒரு வீட்டுக்கு 200 லீற்றர்
தண்ணீர் மாத்திரமே பெற்றுக்
கொள்ள முடியும்.

தண்ணீர் போதாமை காரணமாக
குடிதண்ணீர்க் கிணறுகள் இன்
னும் ஆழமாக்கப்பட்டன.

இதனால் நீர்மட்டம் கீழிறங்கி முழு
மையாக உவர் நீராக மாறியுள்ளது.
இதனால் கிராம மக்கள் தண்ணீர்
பற்றாக்குறைப் பிரச்சினையை
எதிர்நோக்குகின்றனர். இங்குவா
ழும் மக்கள் ஒரு பரப்பளவில் வீடு
கள் அமைத்து வீட்டின் நடுவில்
நான்கு புறமும் விறாந்தைளளளள
போன்ற அமைப்பே காணப்படுகின்
றது. போருக்கு முற்பட்ட காலத்தில்
வன்னிக்குச் சென்று வாழ்க்கை
நடாத்திய மக்கள் பிற்
பட்ட காலங்
களில் மீண்டும் சொந்த ஊருக்குத்
திரும்பியுள்ளனர். வீட்டுத்திட்ட வச
திகள் அரசால் சரியான முறையில்
வழங்கப்படவில்லை.

காரணம் இந்த மக்களுக்கான வரு
மானம் போதுமானதாக இல்லை.
இங்கு அரசால் வீட்டுத் திட்டங்கள்
வழங்கப்பட்ட போதும் அவற்றில்
பல முழுமையாக கட்டி முடிக்கப்ப
டாத நிலையில் காணப்படுகின்றன.
இதற்கு அரசும் எவ்வித நடவடிக்
கையும் எடுக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கும் காரைநகர்
பகுதிக்கும் இடைப்பட்ட கிராமமாக
அராலி காணப்படுகின்றது.

அரச பஸ்களையே மக்கள் பெரும்
பாலும் போக்குவரத்துக்குப் பயன்ப
டுத்துகின்றனர்.

காலை, மதியம், மாலை என்று
முறையே பஸ்கள் போக்குவரத்துச்
சேவையில் ஈடுபடுகின்றன.

எனவே இந்தக் கிராமத்தைக் கருத்
தில் கொண்டு உரியவர்கள் அவர்க
ளின் பிரச்சினையைக் கவனத்தில்
எடுத்து கூடிய விரைவில் அவற்றை
நிவர்த்தி செய்து தர வேண்டும் என்
பதே எம் அனைவரது விருப்பாகும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எல்லாம் 13இன் வேலையா?

பாவப்பட்ட மக்களின் மீட்பரான இயேசு, தான் கொல்லப்படப்போவதை முன்னரே அறிந்து கொண்டு, தனது சீடர்களுக்காக ஒரு இறுதி இராப்போசனத்தை ஒழுங்கு செய்தார். அந்த இறுதி இராப்போசனத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை **13**. அத்தோடு அந்த விருந்தில் இறுதியாக – **13** ஆவது நபராக – வந்து சேர்ந்த யூதாஸ்என்றசீடனேஇயேசுவைக்காட்டிக்கொடுப்பவனாகவும் மாறினான்.

அன்றிலிருந்து **13** என்பது துரதிர்ஷ்டத்தின் இலக்கமாகவே அடையாளப் படுத்தப்பட்டு வருகிறது. கிறிஸ்தவர்களிடம் மட்டுமன்றி உலக மக்கள் அனைவரிடத்திலும் **13** என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒரு எண்ணாகவே மனதில் பதிந்து விட்டது. அதனால்தான் மருத்துவ மனைகளில் கூட **13** ஆம் இலக்க விடுதி அமைக்கப்படுவதில்லை. பேய்களுக்கு பிடித்த எண்ணாகவும் **13** இருப்பதாக ஒரு மூட நம்பிக்கை உண்டு.

இப்படிப்பட்ட குணாம்சத்தைக்கொண்டதாலோ என்னவோ **13**ஆம் திருத்தச் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுவது இன்னமும் இழுபறியாகவே இருந்து வந்தது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக உருப்பெற்ற இந்தத் திருத்தச் சட்டம் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வினை கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது. ஏறக்குறைய இந்தியாவில் உள்ள மாநில முறைமையை அடிப்படையாகக் கொண்டு **13**ஆவது திருத்தச்சட்டம் வரையப்பட்டிருந்தது. ஆனால், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து அதனை முழுமையாக பிரயோகிக்க எந்தவொரு அரசும் முன்வரவில்லை.

**13**ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்ட சில விடயங்களை மாத்திரம் – அதுவும் பெரும்பான்மையினருக்கு சாதகமாக உள்ளவற்றையே – நடைமுறைக்குக் கொண்டு வந்த அரசாங்கங்கள் சிறுபான்மையினருக்கு சாதகமாக உள்ள விடயங்களை மறந்துவிட்டார்கள் அல்லது மறைத்து விட்டார்கள்.

**13**ஆவது திருத்தத்தின் மூலம் இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரித்தார்கள். காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு கொடுக்க முடியாது என்று ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் விடாப்பிடியாக நின்றது. அதனால் எந்தவித அதிகாரங்களுக்கும் இல்லாத உயிரற்ற மாகாண சபைகளையே நடைமுறையில் காணமுடிந்தது. எல்லாவற்றுக்கும் மத்திய அரசின் அனுமதி பெற்றால் மட்டுமே காரியம் நடைபெறும் என்ற நிலையில் மாகாண சபைகள் செல்வாக்கு இழந்து போயின. முதன்முதலாக அமைந்த வடக்கு மாகாண சபை ஆட்சிகூட இப்படிப்பட்ட தன்மைகளாலும் உள்ளகக் குத்துவெட்டுகளாலும் சீரழிந்து மக்களிடத்தே கேலிப்பொருளானமை கண்கூடு.

இப்போது என்னடாவென்றால்ஓரளவுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வாகக் கொள்ளக்கூடிய **13** ஆவது திருத்தத்தை ஒரு போதும் கொடுக்க முடியாது என்று ஒரே போடாக போட்டுள்ளார் கோத்தாபய ராஜபக்ஷ. **13** ஆவது திருத்தம் சமஷ்டிக்கு வழிவகுக்கும் என்பதாலும் சிங்கள மக்கள் அதற்கு கடும் எதிர்ப்பை கிளப்புகிறார்கள் என்பதாலும் **13**ஐ கொடுக்க முடியாது என்பது கோத்தாபயவின் வாதம். **13** இல் உள்ள பல குறைபாடுகளை இனம்கண்டுள்ளதால் அதற்கு மாற்றாக வேறு தீர்வுகள் பற்றி ஆலோசிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் அந்த தீர்வுகள் என்ன என்பது பற்றியோ அதை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார் என்பது பற்றியோ கோத்தாபய எதுவும் கூறவில்லை. நாடாளுமன்றில் கடந்த வாரம் அவர் நிகழ்த்திய அக்கிராசன உரையில் கூட இலங்கையின் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லாதது போன்றே தன்னுடைய 'சுபீட்சத்திற்கான இலக்கு' கொள்கையை முன்வைத்திருந்தார்.

இந்த **13**ஆம் திருத்தத்தை கொண்டு வரப்பட்டபோது அது தமிழர்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வாக அமையாது என்று விடுதலைப் புலிகளும் எதிர்த்திருந்தார்கள். ஆயினும் முள்ளிவாய்க்காலில் தோற்றுப்போன பின்னர் வேறு வழியின்றி **13**ஐ ஆவது ஏற்றுக்கொள்வோம் என்ற நிலைக்கு தமிழர்கள் வந்திருந்தார்கள். ஆனால் இப்போது அதையும் கொடுக்கமாட்டோம் என்று சண்டித்தனம் காட்டத் தொடங்கியுள்ளார் ஜனாதிபதி. எந்த அதிகாரங்களும் இல்லாத ஒரு தீர்வைக்கூட தர மனமில்லாத ஜனாதிபதியால் கடந்த நல்லாட்சியில் மெல்லமெல்ல கட்டப்பட்டுவந்த நல்லிணக்கம் சிதைந்துவிடுமோ என்பதே தமிழ் மக்களின் இப்போதைய ஏக்கப்பெரு மூச்சாகும். இப்படி எல்லாமே சொதப்புவதற்கான காரணம் **13**ஆம் எண்ணின் வேலை தானா?


# நெற்பயிர்ச் செய்கையில் ஒருவித மஞ்சள் நோய்

**முல்லைத்தீவு, ஜன.8**

**காலபோகத்துக்காகச் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கையில் ஒருவித மஞ்சள் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட கற்சிலைமடு பெரியகுளத்தின் கீழான செய்கையில் ஈடுபட்ட அந்தப் பகுதி விவசாயிகளால் இந்த நோய் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நோயானது கடந்த சிறுபோகச்செய்கையின்போதும் அந்தப் பகுதியில் பரவியிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. இதன்போது முத்துஐயன் கட்டு விவசாயப் போதனாசிரியரால் அந்த நோய் தொடர்பில் ஆராயப்பட்டது. நோய்க்கான காரணம் சிற்றுண்ணித் தாக்கம் எனக் கூறப்பட்டு அதற்குரிய சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினியும் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தக் கிருமி நாசினியை விசிறுமாறு விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. தற்போதும் அதே நோய் ஏற்பட்டுள்ளதால், நோயானது விவசாயச் செய்கையைப் பாதிக்கும் நிலை ஏற்படும் எனவும் இதனால், உடனடியாக சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினியை விசிறுமாறு விவசாயப் போதனாசிரியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-500)





# 1864 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாநகரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் கடந்த வருடம் மட்டும் ஆயிரத்து 864பேர்டெங்குத்தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர், நவம்பர்மாதங்களிலேயே அதிகளவிலானவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவினரின் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தமூன்றுமாதகாலப்பகுதிகளிலும் கிட்டத்தட்ட ஆயிரத்து 403 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் ஜனவரிமாதம்241பேரும், பெப்ரவரி மாதம் 83 பேரும், மார்ச் மாதம் 37 பேரும், ஏப்ரல் மாதம் 20 பேரும், மே மாதம்5பேரும், ஜூன்மாதம் 7 பேரும், ஜூலை மாதம் 15 பேரும் , ஓகஸ்ட் மாதம் 23 பேரும், செப்ரெம்பர் மாதம் 30பேரும், ஒக்ரோபர்மாதம் 163 பேரும், நவம்பர் மாதம் 480பேரும், டிசெம்பர்மாதம் 760 பேரும் டெங்குத் தொற்றால்பாதிக்கப்பட்டனர் என்று புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-17)

# பதவிக்கு அலைந்து அவலப்படும் பேராசிரியர்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகதுணைவேந்தராகநியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண பல்கலைக் கழகப்பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாண அமைச்சரின் அலுவலகத்துக்கு அலைந்துதிரிகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒரு கட்டத்தில் அமைச்சரின் உதவியாளர் ஒருவரால் உதாசீனம்செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த அவர், அந்தப் பதவியைத் தனக்குப் பெற்றுத்தருமாறுகோரி இவ்வாறு அலைந்து திரிகின்றார். அந்த அமைச்சர் முல்லைத்தீவில் மக்கள் சந்திப்புக்குச் சென்றிருந்தபோது, அங்கும் சென்ற அந்தப் பேராசிரியர் மக்களுடன் காத்திருந்து பதவியைப் பெற உதவுமாறு கோரியுள்ளார். அங்கும் சரிப்பட்டு வரவில்லை. மீளவும் அவரின் யாழ்ப்பாண அலுவலகத்துக்குச் சென்று உதவுமாறு கேட்டுள்ளார்.

இந்தநிலையில், அமைச்சரின் உதவியாளர் ஒருவர் அந்தப் பேராசிரியரை உதாசீனம் செய்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உறுதிப்படுத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பலதரப்பிடமிருந்தும் பெயர்ப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(து-105)

# ஆணைக்குழு உறுப்பினராக யாழ்.பல்கலைப்பேராசிரியர்

யாழ்ப்பாணம், ஜன. 8

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மானியங்கள் ஆணைக்குழுவில் ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். அவர்களில் ஒருவர் தமிழராகவும் மற்றுமொருவர் முஸ்லிமாகவும் இருப்பர். ஐவர் சிங்களவர்கள்.

அதன்படி குறித்த பேராசிரியர் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மானியங்கள் ஆணைக்குழுவில் தமிழர்தரப்பில் கடந்தமுறை பேராசிரியர் குமாரவேல் நியமிக்கப்பட்டிருந்தார். (து-105)

*நாவற்குழியில் காணாமலாக்கப்பட்டோரின்*

# ஆள்கொணர்வு மனுக்கள் மார்ச் 27இல் விசாரணை

*சாவகச்சேரி, ஜன. 8*

*நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரிகளால் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமலாக்கப்பட்டனர் என்றுகூறி தாக்கல் செய்யப்பட்ட ஆள் கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.*

சாவகச்சேரி நீதிவான் மன்றில் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மனுவின் முதலாவது எதிர்மனுதாரர் மன்றுக்கு வருகை தராதமையாலும் வழக்காளிகள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி குருபரனும் வரவில்லை என்பதாலும், வழக்கைப் பிற்போடுமாறு மனுதாரர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி சுபாஜினி மன்றுரைத்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

1996ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாக விருந்த துமிந்த கெப்பிட்டிவலான தலைமையிலான படையினர், கைது செய்து கொண்டுசென்ற 24 இளைஞர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களில் 3 இளைஞர்களின் பெற்றோர் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் 2017ஆம் ஆண்டு நவம்பரில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

சட்டத்தரணி சுபாசினியின் ஏற்பாட்டில் சட்டத்தரணி கு.குருபரன் மனுக்களை நெறிப்படுத்தியிருந்தார்.

யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் இந்த ஆள்கொணர்வு மனுக்களை பூர்வாங்க விசாரணையுடன் தள்ளுபடி செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் முயன்றிருந்தது. அதை நிராகரித்த யாழ்.மேல்நீதிமன்று, மனுக்களை விசாரிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றுக்கு உத்தரவிட்டது.

(கு-21)

*பசறை விபத்தில் உயிரிழந்தோரின்*

## கிரியைகளுக்கு தலா 50,000 வழங்க அரசு தீர்மானம்

பதுளை, ஜன. 8

பசறை பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். எனினும், இழப்பீடு வழங்குவது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

பசறை மடுல்சீமை பிரதான பாதையில் ஆறாம் மைல் கல்லருகே நேற்றுமுன்தினம் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சுமார் 100அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர். 40 காயமடைந்தனர்.

விபத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கிராமிய மக்கள் எனப் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இறந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்கு உடனடியாக நிதி வழங்குவதோடு அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் கடிதம் மூலமாக வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், இறுதிக் கிரியைக்கு தலா 50 ஆயிரம் ரூபா பணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். கவலைக்கிடமாகவுள்ள மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(கு)

*ஏப்ரல் 21 தாக்குதல்:*

## 12 பேருக்கும் மறியல் நீடிப்பு



கொழும்பு, ஜன. 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான 12 பேரை மேலும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க கல்முனை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

இந்தச் சந்தேகநபர்கள் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு கல்முனை நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

"பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் மேலதிக விசாரணைக்காக 3 மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோம். தற்போது தடுப்புக்காவல் காலப்பகுதி நிறைவடைந்துள்ளது" என்று சந்தேகநபர் ஒருவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி மன்றில் சுட்டிக்காட்டினார்.

சந்தேகநபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கைதாகி பல மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரின் ஆட்சேபனை காரணமாக சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

(கு)

# கோத்தா வென்றதால் மழை பெய்கின்றதாம்

தேர்தலுக்கு முன் மழை பெய்யாது வறட்சி இருந்தது. தேர்தல் முடிந்து கோத்தாபய வென்ற பின்னர்தான் மழை பெய்தது.

தற்போது குளங்கள் நிறைந்து விவசாயம் செய்கிறார்கள். இனி மக்களின் கைகளில் பணம் இருக்கும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான தர்மபால செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சில நாள்களுக்கு முன்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபயவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்றும் அடுத்த தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களிக்காது ஜனாதிபதி கோத்தாபயவின் கட்சிக்கே வாக்களிக்கலாம் என்றும் தமிழ் மக்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு வாக்களித்திருக்கவில்லை.

தற்போது ஜனாதிபதி கோத்தாபயவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

வரவிருக்கும் தேர்தலில் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காமல், ஜனாதிபதி கோத்தாபயவின் கட்சிக்கே வாக்களிக்கலாம் என்று தமிழ் மக்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளைவான் பிரச்சினை தொடர்பில் பேசியதால்தான் தமிழ் மக்களின் வாக்குகள் குறைந்தன.

பொய்யான பரப்புரைகளுக்கு செவிசாய்க்காது எந்தக் கட்சி சரியாக அரசை நடத்துகின்றதோ அந்தக் கட்சியுடன் இருங்கள்.

கடந்த ஆட்சியில் அரசு ஒன்று இருந்ததா என்றுகூடத் தெரியவில்லை.

மைத்திரிபால ஒருபக்கம் இழுக்க, ரணில் விக்கிரமசிங்க இன்னொரு பக்கம் இழுக்க கடைசியில் மக்கள்தான் பாதிக்கப்பட்டனர். எனவே சிந்தித்துச் செயற்படுங்கள்- என்றார்.

(கு-18)

## இன்றைய நாள்

**மேடம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். உணவில் கட்டுப்பாடு வேண்டும். பொருள்களை இரவலாக கொடுக்க வேண்டாம்.

**இடபம்:** குடும்பத்தினரிடம் அன்பு, பாசம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மிதுனம்:** அவசரப்பணி ஏற்படலாம். சூழ்நிலை உணர்ந்து செயல்பட வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. சேமிப்பு பணம் செலவாகும்.

**கடகம்:** அன்பானவர்களின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை சீராகும். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம்:** செயல்களில் திறமை கூடும். நண்பர்கள் புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதியவழி உருவாகும். பணவரவு அதிகரிக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**கன்னி:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு இருக்கும். புத்திரரை இதமாக வழி நடத்தவும்.

**துலாம்:** பணிகளுக்கு தகுந்த முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரம் சுமுகமாக இருக்கும். உறவினர்வகையில் செலவு ஏற்படலாம். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** செயலில் மதிநுட்பத்திறன் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். கூடுதல் பணவருமானம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**தனுசு:** செயலில் நேர்த்தியும், திறமையும் மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்சாகம் பெறுவீர்கள். நிலுவை பணம் வசூலாகும். சுப நிகழ்ச்சியில் கல்ந்து கொள்வீர்கள்.

**மகரம்:** சொந்த நலனில் அக்கறை ஏற்படும். எதார்த்த பேச்சினால் அதிருப்தி உருவாகலாம். தொழில், வியாபாரம் சீராக அதிக உழைப்பு தேவை. ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கும்பம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**மீனம்:** குடும்ப உறுப்பினர் அதிக பாசம் கொள்வர். பணியில் தடைகள் அகலும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். பணப்பரிவர்த்தனை முன்னேற்றமாகும்.

# தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை விழா



படங்கள் செ.ரவிசாந்

யாழ்ப்பாணம்,ஜன.8

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயப் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 95ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஆலய அன்னபூரணி மண்டபத்தில் சிறப்புற இடம் பெற்றது.

ஆலயத்தில் விசேட ஆராதனை, சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலய வழிபாடுகளைத் தொடர்ந்து. ஆலய வளாகத்தில்அமைந்துள்ளசிவத்தமிழ்ச் செல்வியின் உருவச் சிலை முன்பாகப் பிரார்த்தனை இடம் பெற்றது.

ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள் மற்றும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் ச.பாலச்சந்திரன் உள்ளிட்டோர் சிவத்தமிழ்ச் செல்வியின் உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர்.

திருமுறை மடத்தில் திருமுறை பாராயணம் இடம்பெற்றது. தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள் மற்றும் இணுவில் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலர் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகள் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அன்னையின் பிறந்தநாளை முன்னிட்டு, யாழ். போதனா மருத்துவமனையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டது. தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு 50 ஆயிரம் ரூபா நிதியுதவியும், மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் க.பொ. த சாதாரணதரம் 2020 இல் கற்கும் உயர் தகைமையுடைய, உதவிதேவைப்படும். மாணவர்களுக்கு சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியத்தால் இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கப்பட்டன,

அதனைத் தொடர்ந்து கல்வி, தமிழ் இலக்கியம், கலை மற்றும் பன்முகப் பணிகள் ஆற்றி வரும் ஐவர் 'சிவத்தமிழ் விருது' வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம்(கல்விப்பணி), மூத்த கவிஞரும், பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமான கலாபூஷணம் சோ. பத்மநாதன் (தமிழ் இலக்கியம்), மூத்த எழுத்தாளரும், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி. கோகிலா மகேந்திரன் (பன்முகப் பணிகள்), மூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வி.கே. பஞ்சமூர்த்தி (இசைப் பணி), வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியரும், ஓவியருமான கலாநிதி மு.க.- சு. சிவகுமாரன் (கலை, இலக்கியப் பணி) ஆகியோர் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறார்கள், ஆலய நிர்வாகிகள், மூத்தோர்கள், பல் துறைசார்ந்தவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (சு-26)

## மன்னாரில் இடம்பெற்ற சர்வமத குழுக் கூட்டம்

மன்னார்,ஜன.8

மத ரீதியாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மன்னார் மாவட்டத்திலுள்ள சர்வ மத குழு பிரதிநிதிகளை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச சர்வமத குழுக் கூட்டம் நேற்று இடம் பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அதன் பிராந்திய இணைப்பாளர் எம்.யூ.எம். உவைஸ் தலைமையில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

'சமய சகவாழ்வை கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற மத ரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்த்து வைக்கும் முகமாக இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள் , அரச அலுவலர்கள், கிராம அலுவலர்கள், சமூக பொருளாதார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)





## மன்னாரின் அபிவிருத்திக்காக மஸ்தானின் கலந்துரையாடல்

மன்னார், ஜன. 8

இந்த வருட வரவு - செலவுத் திட்டங்கள் ஊடாக மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸின் நெறிப்படுத்தலில், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலர்கள், திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். மாவட்டத்தின் பல திட்டங்கள் குறித்த அவசிய தேவைகளை கருதி திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் குறித்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில், முசலிப் பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்றுவரும் காணிப் பிரச்சினை தொடர்பான மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. (ம-56,213)

## யாழ். மாவட்டத்தில் 17 வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.8

உள்ளூர் அபிவிருத்திக்கு உதவியளிக்கும் திட்டத்தின் கீழ், சந்தை, வாய்க்கால் மற்றும் வீதி மீள்புனரமைப்புத் திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்தில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய 17 உள்ளூராட்சி சபைகளிலும் 17 உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

குருநகர் முதல் புதிய கடற்கரை வீதி வரை மதில் அமைத்தல், கொல்லங்கரை தேவாலய வீதி (பகுதி) மீள்புனரமைத்தல், மயிலியதனை மாயவர் கோயில் வீதி மீள் புனரமைத்தல், தம்புறுவலை மில் முன் ஒழுங்கை வாய்க்கால் மீள்புனரமைப்பு, சுதுமலை சிம்மியபாரதி இணைப்பு வீதி மாப்பியன் மில் மற்றும் மாவத்தை வீதி மீள்புனரமைப்பு, கொக்குவில் சம்பியன் வீதி 3ம் ஒழுங்கை வாய்க்கால் புனரமைப்பு, அல்லைப்பிட்டி தோட்ட வீதி மீள்புனரமைப்பு, வல்லிபுரம் வல்லியானந்தம் வேதமன் இணைப்பு வீதி மீள்புனரமைப்பு, காங்கேசன் துறை மீன்சந்தை புனரமைப்பு மற்றும் குடிதண்ணீர், சுகாதார வசதி வழங்கல், நெல்லியடி குளங்கரை வீதி புனரமைப்பு, ஏழாலை மத்தி சிவன் கோயில் வீதி புனரமைத்தல், நாவற்குழி தேனாபொக்கணை வீதி புனரமைத்தல், நாகம்மாள் வீதி புனரமைத்தல், சங்கானை மேற்கு - மத்தி விழிசுட்டி மதில் மற்றும் கால்வாய் அமைத்தல், கரம்பொன் திரேசா வீதி புனரமைத்தல், பெரிய துரை பூமுனை வீதி புனரமைத்தல், புத்தூர் மேற்கு கலைமதி பிரதான வீதி புனரமைத்தல் உள்ளிட்ட 17 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.(சு-50)

# பிள்ளையானின் கைது அரசியல் பழிவாங்கல்

## வக்காலத்து வாங்கும் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜன. 8

**அரசியல் தேவைகளுக்காகவே துமிந்த சில்வா, பிள்ளையான் போன்றோர் கடந்த ஆட்சியின்போது திட்டமிட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதித்துறையின் சுயாதீனம், நாடாளுமன்றத்தின் உயரிய தன்மை ஆகியவற்றை கடந்த அரசு சவாலுக்குட்படுத்திவிட்டது. அரசியல் பழி தீர்ப்பதற்காக நீதித்துறை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது தற்போது அம்பலமாகிவருகின்றது. நீதிபதிகளை நியமித்து, ஜனாதிபதிக்கு தொலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்திக்கொடுத்து அரசியல் தேவையை பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கிலேயே துமிந்த சில்வாவுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது வெளியாகியுள்ள குரல் பதிவு மூலம் இது தெரியவருகின்றது. எனவே, அந்தத் தீர்ப்பு எவ்வளவு அநீதியானது? பிள்ளையான் இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அரசியல் பழிவாங்கல் தொடர்பில் பேசுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுக்கு தார்மீக உரிமை கிடையாது - என்றார். (ஒ.5,44)



# உறுதிச் சான்றிதழை ஒரே நாளில் வழங்குக!

### கோத்தா பணிப்பு

கொழும்பு, ஜன. 8

வீடொன்றை அல்லது சிறிய வர்த்தக நிலையமொன்றை நிர்மாணிக்கும் திட்டங்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருப்பின் அதற்கான அனுமதியை ஒரே நாளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல், வீட்டு வசதிகள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

நிர்மாணப் பணிகளுக்கான திட்டங்களுக்கு அனுமதி வழங்கும்போது நிலவும் கடுமையான சட்ட திட்டங்கள் மற்றும் நீண்டகால தாமதம் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். சட்ட திட்டங்களை இலகுபடுத்தி, மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை முடியுமான அளவு குறைப்பது அரசின் பொறுப்பு என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

திட்டங்களை அனுமதிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் குறித்த நிறுவனங்கள் துரிதமாக அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்தல் குறித்து கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது அனுமதியளிக்கப்படாத திட்டங்களுக்கு அனுமதியளிப்பது சம்பந்தமாக சட்டம் குறித்த அறிவுள்ள அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார். உறுதிச் சான்றிதழை ஒரே நாளில் வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முதன்முறையாக வீடொன்றை கொள்வனவு செய்யும் ஒருவருக்கு நீண்டகால கடன் மற்றும் நிவாரண வட்டி முறைமையின் கீழ் கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

திட்டங்களை அனுமதிக்கும்போது ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்தாது பூகோள நிலைமைகளை கருத்திற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மாகாண மற்றும் பிரதேசங்களுக்கேற்ப முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கண்டறிந்து அவற்றுக்கான அனுமதியையும் அரச நிறுவனங்களினூடாகவே மேற்கொண்டு முதலீட்டுச் சபைக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வலுவூட்டப்படுவதுடன், தமது திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாடு முழுவதும் சகல சிறிய நகரங்களையும் முறையாகவும் அழகிய முறையிலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக தலவாக்கலை, எல்ல மற்றும் கினிகத்ஹேன போன்ற நகரங்களை நவீனமயப்படுத்தக்கூடிய வழி வகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குப்பைகளை சேதனப் பசளைகளாக மாற்றுவதற்கான திட்டங்களைத் தயாரிக்குமாறும் அதற்காக அதிகபட்சம் தொழிநுட்பத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினரிடம் தெரிவித்தார்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் பங்களிப்பை பெற்று குவிந்திருக்கும் மணற் படிவுகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மணலின் விலையை குறைப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதன் மூலம் பல பிரதேசங்கள் முகங்கொடுத்துள்ள வெள்ள அச்சுறுத்தலுக்குத் தீர்வு வழங்க முடியும்.

பேர வாவியைச் சுத்தப்படுத்தும் திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்போது பேர வாவிக்கு கழிவுகள் சேரும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ள இடங்களை உடனடியாக மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டது. (ஒ.5)



சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பிரதேச இளைஞர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் கடந்த முதலாம் திகதி ஓவியங்களை மூடியிருந்த தறப்பாள்கள் அகற்றப்பட்டு மக்கள் பார்வைக்குத் திறந்து விடப்பட்டன. (ஒ.5)

# மருத்துவ அறிக்கை பெறும் நிலையங்கள் விரிவாக்கம்

கொழும்பு, ஜன. 8

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற தேவையான மருத்துவ அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக 3 பிரதேச அலுவலகங்களை அமைப்பதற்கு போக்குவரத்து முகாமைத்துவம் மின் சக்தி எரிசக்தி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மருத்துவச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக பெரும்பாலானோர் கொழும்புக்கு வெளி இடங்களில் இருந்து வருகை தருகின்றனர். இவர்களின் வசதிக்காக இந்தப் பிரதேச அலுவலகங்கள் 3 புதிதாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரத்தினபுரி, பண்டாரவளை, நுவரெலிய பிரதேசங்களில் உள்ள மக்களின் வசதிக்காக அலுவலகம் ஒன்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் போன்று வடமத்திய மாகாண மக்களுக்காக துணை அலுவலகம் ஒன்றும் தம்புள்ளையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமேல், கம்பஹா மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள பிரதேச மக்களுக்காக நீர்கொழும்பில் துணை அலுவலகம் ஒன்றையும் அமைப்பதற்கு தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகன அனுமதிப் பத்திரத்தை அச்சிட்டு வெளியிடக்கூடிய வசதிகளைக்கொண்ட அலுவலகத்தை அனுராதபுரத்தில் அமைப்பதற்கும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஒ.5)

# மயானங்கள் அபிவிருத்தி

நல்லூர், ஜன. 8

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மயானங்கள் இந்த வருடத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான வேலைத் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் சபைக்கு உட்பட்ட மயானங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மயான அபிவிருத்திகளுக்கு 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி செய்யப்படவுள்ள மயானங்கள் விரைவில் தீர்மானிக்கப்படும்.

மயானங்களுக்குச் சுற்றுமதில் அமைத்தல், மயான முன்பக்கம் வளைவு அமைத்தல், மயான உள்ளக வீதி, கொட்டகை, மண்டபம் உட்பட ஏனைய அபிவிருத்திகள் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும். அதனை விட சில மயானங்களுக்கு மின்சார ஒளி வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று சபையினர் தெரிவித்தனர். (க-17)

# சில்லறை இல்லை நழுவும் நடத்துநர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ் சாலையில் இருந்து தீவகத்துக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணத்துக்கான சிட்டைகளை வழங்கும் நடத்துநர்கள், மிகுதிப் பணம் வழங்கத் தயக்கம் காட்டுகின்றனர். சில்லறை இல்லை எனக் கூறி நகர்ந்து சென்றுவிடுகின்றனர் என்று பயணிக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிகட்டுவான், ஊர்காவற்றுறை, வங்களாவடிச் சந்தி ஊடாக ஊர்காவற்றுறை வரை பயணிக்கும் 776, 777, 778 ஆகிய இலக்க வழித்தடப் பஸ்களின் இந்தச் சம்பவங்கள் தினமும் இடம்பெறுகின்றன.

குறுந்தூரப் பயணிகள் பயணச் சிட்டை கேட்டால், பணத்தை மட்டும் பெற்றுக் கொண்டு நடத்துநர்கள் முன்பக்கம் சென்று விடுவர். இதனால் நாளாந்தம் பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-154)

### பெண் சப் இன்ஸ்பெக்டரின்

## கையைக் கடித்த பிரிட்டன் பெண்!

காலி, ஜன. 8

காலியில், பெண் உபபொலிஸ்பரிசோதகரின்கையைக் கடித்தகுற்றச்சாட்டில்பிரிட்டன்பெண்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹப்பாவன பிரதேசத்தில் தற்காலிகமாக விடுதியில் பிரிட்டன் பெண் தனது கணவனுடன் தங்கியிருந்த போது பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பெண்ணிடமும் அவரது கணவனிடமும் கடவுச்சீட்டு கோரப்பட்டபேதே பிரிட்டன்பெண், பொலிஸ்பரிசோதகரின்கையை கடித்துள்ளார்எனத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டன் பிரஜைகளான இவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக இலங்கைக்கு வந்து செல்கின்றனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இருவரினதும் விசா கடந்த மாதம் 6ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. சந்தேக நபரான பெண்ணுடன் அவரது கணவனும் கைது செய்யப்பட்டுள்ளார். பிரிட்;டன் பெண் கடித்தமையால்காயங்களுக்குள்ளான உபபொலிஸ்பரிசோதகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ.5)

## சிங்கப்பூர் சண்முகம் இலங்கை வருகை


கொழும்பு, ஜன. 8

சிங்கப்பூர் அரசின் உள்நாட்டு விவகாரம் மற்றும் சட்டம் தொடர்பான அமைச்சர் கே. சண்முகம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளார்.

மேலும் அவருடன் ஐந்து பேர் இலங்கைக்கு வந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது. இலங்கைவந்துள்ள அமைச்சர் கே. சண்முகம், ஜனாதிபதிகோத்தாபயவைச் சந்தித்து கலந்தரையாடவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலதரப்பினரை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## சடலத்தை புதைக்க இடமில்லாத நிலை



கண்டி, ஜன. 8

மலையகத் தோட்ட தொழிலாளர்கள் நாளாந்தம் பல்வேறுபிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வரும்நிலையில், இறந்ததொழிலாளர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு இடமில்லாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நுவரெலியா கொத்மலை லபுக்கலை தோட்டம் கொண்டகலை பிரிவு மக்களே இந்த அவலநிலைமையைஎதிர்கொண்டுள்ளனர்.

கண்டி நுவரெலியா வீதி புனர் நிர்மாணம் செய்யப்பட்டபோது, ஏற்கனவே இருந்த நல்லடக்கப் பூமி மறைக்கப்பட்டது. இதனால்பெரும்பாலானகல்லறைகளும், புதைகுழிகளும்மண்போட்டுமூடப்பட்டுள்ளன.

இதற்கு மாற்றீடாக ஒரு பொருத்தமான இடத்தைப்பெற்றுக்கொள்வதற்கு தோட்ட மக்களும், அரசியல்பிரமுகர்களும் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டும் பயனில்லை.

தற்போது காணப்படும் நல்லடக்க பூமி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. வீதியோரமாக குறுகிய இடமிருப்பதால் உடல்களைப் புதைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே பொருத்தமான இடம்மொன்றைப்பெற்றுத்தருமாறுமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# எல்லாவற்றையும் அம்பலப்படுத்துவேன்!

### ரஞ்சன் ராமநாயக்க மிரட்டல்

கொழும்பு, ஜன. 8

*பல நபர்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் ஊழல் குறித்த விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றைச் சரியான நேரத்தில் அம்பலப்படுத்துவேன்.*



இவ்வாறு அண்மையில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதியமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க பொலிஸ் அதிகாரிகளுடன்தொலைபேசியில் பேசிய பேச்சுக்கள் சில சமூக ஊடகங்களில் கசிந்துள்ளன.

இது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'மாஃபியா திரைப்படங்களைப் பார்த்தே தொலைபேசி குரல் பதிவுகளை ஒலிப்பதிவு செய்தேன். சில ஆதாரங்களில் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு வெவ்வேறு தந்திரங்களைப்பயன்படுத்தினேன். இவ்வாறான விடயங்கள் குறித்து பல உயர் குற்றப்புலனாய்வு அதிகாரி களுடன் பேச வேண்டி யிருந்தது.

பல நபர்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் ஊழல் குறித்த விவரங்கள் இருக்கின்றன. சரியான நேரத்தில் அவர்களை அம்பலப்படுத்துவேன்' என்றார்.

முன்னைய ஆட்சியின்போது குற்றப்புலனாய்வு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சானி அபேசேகர உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான குரல் பதிவுகள் அனைத்தும் சமூக ஊடகங்களில் பகிரங்கமாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## வடக்கின் அபிவிருத்திக்கு நிதி விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்கு மாகாணத்தில் உலக வங்கி நிதியீட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்துக்கு, பொது நிர்வாக உள்நாட்லுவல்கள் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி உதவியளிக்கும்திட்டப்பணிப்பாளர் டி.பி. சமரகோன் நிதியை விடுவித்துள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு 1786.73 மில்லியன் ரூபா (9,981,725 அமெ. டொலர்) நிதி நான்கு வருட அபிவிருத்திக்காக 34 உள்ளூராட்சிமன்றங்களுக்குப்பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருடத்துக்கு இரு தடவைகள் என்ற அடிப்படையில் மாவட்ட திட்டப் பொறியியலாளரால் அனுமதிக்கப்பட்டு, உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

கடந்த வருடம் மக்கள் பங்கேற்புத்திட்டத்தில் மக்களால் முன்னுரிமையளிக்கப்பட்ட, உள்ளூராட்சி சபைகளின் ஆளுகைக்குட்பட்ட ஆவண ரீதியாக முறைமைப்படுத்துப்பட்ட திட்டங்களுக்கே, மாவட்ட பொறியியலாளர்களால் அனுமதிக்கும்பொறிமுறை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு. வவுனியா, யாழ்ப்பாணம் என 5 மாவட்டங்களுக்கும் மாகாண ஆணையாளர் ம. பற்றிக் டிறைஞ்சன் திட்டப்பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உதவித்திட்டப்பொறியியலாளர்தலைமையில் இயங்கும்பட்குழு ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைரீதியாக முன்னுரிமைப்படுத்கப்பட்ட திட்டங்களை நேரில் சென்று ஆராய்ந்து, அனுமதியளிக்கும். நாடுதழுவிய ரீதியில் வடக்கு. கிழக்கு, வடமத்தி, ஊவா ஆகிய 4 மாகாணங்கள் மட்டும் இந்தத் திட்டத்துக்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (க-50)

## அடையாளம் காணாத நிலையில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன. 8

தொப்புள் கொடியுடன் சடலமாக மீட்கப்பட்ட ஆண் குழந்தை இதுவரை அடையாளம் காணப்படாதுள்ள அவலம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

பிறந்து இரண்டே நாள்களான ஆண் குழந்தை கடந்த மூன்றாம் திகதி யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சடலமாக மீட்கப்பட்டது. புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்திலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

தொப்புள்கொடியுடன் அந்தக்குழந்தைகிணற்றில்வீசப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் தடயவியல் பொலிஸாருக்கு அறிவித்து தடயங்களைப்பதிவுசெய்தனர். அழுகியநிலையில் காணப்பட்ட குழந்தையின் சடலம், விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டு நான்கு நாள்கள் கடந்தநிலையில்குழந்தையின்சடலத்தையாரும்அடையாளம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எவரும்உரிமைகோராதநிலையில்சடலம்யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையின்பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்துக்கு உரித்துடையவர் அடையாளம் காட்டி 15 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனைப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## 5214 நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாநகரப்பிரதேசத்தில்கடந்த 2019 ஆம்ஆண்டில் மட்டும் ஐயாயிரத்து 214 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான ஏ. ஆர். வி தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

மாநகரப் பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக, நாய்களுக்கு ஏ. ஆர்வி. தடுப்பூசி ஏற்றப்பட்டன.

அதனைவிட 16 நாய்களுக்குசத்திரசிகிச்சைமூலம்கருத்தடையும் செய்யப்பட்டது. ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பிரிவுகளிலும் இதற்கென ஒதுக்கப்பட்ட நிலையங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. தடுப்பூசி ஏற்றப்பட்ட நாய்களுக்கான உறுதிப்பத்திரமும் வழங்கப்பட்டது. (க-17)

# ஈரான் - அமெ.மோதல் இலங்கைக் கருத்து

கொழும்பு, ஜன. 8

ஈரான் இராணுவத் தளபதியின் படுகொலையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பதற்றங்கள் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

'மூத்த ஈரானியத் தலைவர் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றங்கள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஆக்கபூர்வமான உரையாடலின் மூலம் அனைத்துத் தரப்பினரும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படவும், அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுமாறும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது' என்றுள்ளது.

ஈராக்கின் பாக்தாத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்கா நடத்திய வான்வெளித் தாக்குதலில் ஈரானிய இராணுவத் தளபதி காசிம் சுலைமான் மற்றும் ஈரானிய ஆதரவு ஈராக் போராளித் தலைவர் அபு மஹ்தி அல் முஹந்திஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர். (ஒ.5)



# விமான நிலைய வீதிக்கு தனியார் காணிகள் அபகரிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 8*

*தனியார் காணிகள் ஊடாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வீதியை அமைப்பதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.*

கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 6 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்க விமானப்படையினர் மறுத்து வரும் நிலையில், அந்தப் பகுதி ஊடாக விமான நிலையம் செல்லும் பாதையைச் செப்பனிடுவது தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாதுகாப்பு வேலிக்கு வெளியே 11 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 5 ஏக்கர் காணிகள் ஊடாக புதிய வீதியை அமைக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன.

புதிதாக வீதியை அமைப்பதற்காக தனியாருக்குச் சொந்தமான உறுதிக் காணிகள், உரிமையாளர்களின் சம்மதம்இன்றியும், உரிய சட்ட முறைமையின் கீழான சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலும் அபகரிக்க முயற்சிக்கப்படுகிறது என்று காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், விமான நிலையம் அருகே உள்ள பாதை விடுவிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து மாவட்டச் செயலாளர் பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-105)

# வேணாவிலில் 60 பேருக்கு கற்றல் உபகரணங்கள்



புதுக்குடியிருப்பு, ஜன. 8

புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் வறுமைகோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் 60 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் க.ஜெனமேஜயந் ஆகியோரின் ஏற்பாட்டில் டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வசிக்கும் குடும்பங்களின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வேணாவில் வண்ணன் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபதவிசாளர் க.ஜெனமேஜயந் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வே.பரமலிங்கம், வேணாவில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மற்றும் வண்ணன் சனசமூக நிலைய தலைவர் ,செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-19)

# திருவாசக முற்றோதல்

சங்கானை, ஜன. 8

யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு மன்ன தோட்டம் ஜெகசோதி அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-63)

# சிங்களவரின் ஆணையால் நானும் கூட மாறிவிட்டேன்!

## கூட்டமைப்பும் மாறவேண்டும் என்கிறார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜன. 8

பொதுவாக நான் அதிகாரப் பகிர்வை விரும்பு கின்றவன். ஆனால் இம்முறை தேர்தலில் பெரும்பான்மை மக்கள் வழங்கியுள்ள மக்கள் ஆணையைப் புரிந்து கொண்டே நானும் செயற்படவேண்டியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த மக்கள் ஆணையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் பேச்சு நடத்துமா என்ற விவகாரம் போன்றன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே டிலான் பெரேரா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வழங்கிய மக்கள் ஆணை என்ன என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் புரிந்தகொள்ள வில்லை என்றே தெரிகிறது.

சிறுபான்மை மக்கள் இன ரீதியாக பிரிந்து அரசை தீர்மானிக்கும் சக்தியாக மாறினால் நாங்களும் அவ்வாறு செய்ய தயார் என்று சிங்கள பௌத்த மக்கள் கடந்த தேர்தலில் ஒரு செய்தியை வழங்கியிருக்கின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு இனவாத ரீதியில் செயற்பட முடியாது என்பதை சிங்கள பௌத்த மக்கள் அறிவித்திருக்கின்றனர்.

யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுவாக நான் அதிகாரப் பகிர்வை விரும்புகின்றவன்.

ஆனால் இம்முறை தேர்தலில் பெரும்பான்மை மக்கள் வழங்கியுள்ள மக்கள் ஆணையை புரிந்து கொண்டே நானும் செயற்படவேண்டியிருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்ட மப்பும் இந்த மக்கள் ஆணையை புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் கூட்டமைப்பு இந்த ஆணையைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. கடந்த நான்கரை வருடகாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டிய சண்டித்தனத்தை தற்போது காட்ட முடியாது. அந்தச் சண்டித்தனத்துக்கு அரசு அடிபணியாது.

யதார்த்தத்தையும் மக்கள் ஆணையையும் புரிந்து கூட்டமைப்பு செயற்படுவது அவசியம்.

அதாவது மக்களால் வழங்கப்பட்டுள்ள ஆணையை புரிந்து கொண்டு கூட்டமைப்பு புத்திசாலித்தனமாகச் செயற்படவேண்டும்.

அவ்வாறு செய்வதே தற்போது பொருத்தமானதாக அமையும்.

எங்களால் மட்டுமே ஆட்சியை தீர்மானிக்க முடியும் என்ற கடந்தகால சண்டித்தனத்தைக் கைவிட்டு கூட்டமைப்பு புத்திசாலித்தனமாகச் செயற்படுவது கட்டாயமாகும்- என்றார். (ஒ.5)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜன. 8

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை வியாழக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி, அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை, இயற்றாழை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி மாவட்டத்தில்** கைவேலியிலிருந்து புதுக்குடியிருப்பு வரை, ஹைட்றாமணி ஆடைத்தொழிற்சாலை, 682 ஆவது படைப்பிரிவு முகாம் புதுக்குடியிருப்பு, பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாள், கிளாலி ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், நாகரிலுப்பைக்குளம், பொன்னவரசங்குளம், அறுகம்புல்வெளி, அவுசதப்பிட்டிய ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# ஊடகக் கற்கைகள் விண்ணப்பம் கோரல்

*யாழ்ப்பாணம், ஜன.8*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள் துறையால் ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா (பகுதி நேரம்- இரு ஆண்டுகள்) பயிற்சி நெறிக்கு 2020-2021 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அனுமதிக்காகத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் எவ் பிரிவிலிருந்தும் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை தபால் மூலம் கலைப்பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# முதுகெலும்பிருந்தால் ஐ.நாவில் கூறுங்கள்

## அரசுக்கு சிவாஜிலிங்கம் சவால்

*யாழ்ப்பாணம்,ஜன.8*



ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று நீதி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இதனை இங்கு கூறாது, முதுகெலும்பு இருந்தால் நடைபெறவுள்ள ஐ.நா. கூட்டத் தொடரில் வைத்துக் கூறுங்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நல்லூரில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு, கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவையில் வைத்து 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதாக இணக்கம் தெரிவித்தது.

அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. எனினும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட அடுத்த ஆண்டில் இருந்து அப்போதைய ஜனாதிபதி,பிரதமர், சிரேஷ்ட அமைச்சர்கள் அதனைநிறைவேற்றமாட்டோம் என்று கூறி வந்தனர்.

எனினும் இங்குள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமனற உறுப்பினர்கள் இலங்கைக்குப் பிரேரணையை நிறைவேற்ற கால அவகாசம் வழங்க இணக்கம் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் தற்போதைய அரசின் நீதி அமைச்சர் ஐ.நா. தீர்மானத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று அண்மையில் கூறியுள்ளார். உங்களுக்குத் தைரியம் இருந்தால் ஐ.நா. உறுப்பு நாடுகளில் இருந்து விலகுங்கள் பார்க்கலாம். ஜனாதிபதியும் இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பதைப் போலவே அண்மையில் உரையாற்றியுள்ளார். தமிழினம் இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வு ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வை கோரி வருகின்றது. அதனை கூட செய்ய மாட்டேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அப்படியானால் தமிழ் மக்களுக்கான இடைக்காலத் தீர்வைக் கூட தர அவர் தயாராக இல்லை.

எனவே இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க ஐ.நா. தலையிட வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.- என்றார். (க-20)

# அபிவிருத்தியால் தீர்வு கிட்டாது

## ஆனந்தன் எம்.பி. அறிவுரை

*முல்லைத்தீவு.ஜன.8*



நாட்டை அபிவிருத்தி செய்வதனூடாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி ஒட்டுமொத்தமாகச் சிந்திக்கின்றார். எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடைய, அரசியல் தீர்வுப் பிரச்சினை, அரசியல் ரீதியாக தீர்க்கப்படாத வரையில், வெறுமனே அபிவிருத்தியால் மாத்திரம் தீர்க்க முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஒரு பக்கத்திலே கைதுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மறுபக்கத்தில் மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனாலும் தமிழ் மக்களினுடைய அரசியல்தீர்வு தொடர்பாக எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலைமைதான் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுடைய அரசியல்தீர்வு தொடர்பில், பல சாதகமான நிலைமைகள் இருந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி அரசைக் காப்பற்றுகின்ற நடவடிக்கைகளையே மேற்கொண்டனர்.

இவ்வாறு கடந்த காலங்களில் இருந்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டு, தற்போது வந்திருக்கக்கூடிய புதிய அரசுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்காக கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக தவமாய்தவமிருக்கின்றனர். ஆனால் வந்திருக்கின்ற புதிய அரசோ அவர்களை அழைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசத் தயாராக இல்லை.

தற்போதுள்ள அரசு தொடர்ந்து இருக்கும் வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அரசிடம் அபிவிருத்தி விடயங்களையோ, தீர்வு தொடர்பான விடயங்களையோ முன்வைக்க முடியாது. இந்த வெற்றிடத்தை நிரப்பப்போவது யார் என்ற கேள்வி எழுகின்றது. அரசைத் தீர்மானிக்கப் போவது தெற்கில் உள்ள சிங்கள மக்களின் கையிலேயே இருக்கின்றது. அது எமது கைகளில் இல்லை.

எனவே எமது தமிழ் மக்களின் அபிவிருத்தி, அரசியல் தீர்வு விடயங்களை அரசிடம் பேசுவதற்கு மாற்று அணி ஒன்று அவசியமாகும். - என்றார். (க-246)



# இராணுவம் வழங்கிய கற்றல் உபகரணங்கள்

*மன்னார்,ஜன.8*

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வறுமை கோட்டுக்குள் வாழும் 112 மாணவர்களுக்கு இராணுவத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு மன்னார் பத்திமா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் பேசாலை 543 ஆவது இராணுவ படையணி தலைமையகத்தின் கேணல் மங்கள மாயாதுன்னவின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு செய்த தென்பகுதியைச் சேர்ந்த பிரசாத் லொக்குபிட்டிய, ரங்கநாத் கிரிந்தெகு ஆகியோருடன் தள்ளாடி 543 ஆவது கட்டளை பணியக தலைமை அதிகாரி பிரிகேடியர் சுபாசன வெலிகன, மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் கே.ஜெ.பிறட்லி,கத்தோலிக்க, இஸ்லாமிய மற்றும் பௌத்த மதத் தலைவர்கள்,முற்படைகளின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-60)

# தரம் 6 மாணவருக்கு சிறப்பான வரவேற்பு

வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது.

தேசிய ரீதியில் தரம் 6 பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைவாக அனைத்து பாடசாலைகளிலும் தரம் 6 மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் அயல் பாடசாலைகளில் கல்வி கற்ற 62 மாணவர்கள் அல் இக்பால் மகாவித்தியாலயத்தில், தரம் 6 கல்வி நடவடிக்கைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் சின்னம் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர்.

அத்துடன், பாடசாலை சூழ்லை கற்றல் நடவடிக்கைக்கு ஏற்ற பகுதியாக மாற்றியமைக்கும் பொருட்டு பாடசாலை பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் 62 மரக்கன்றுகளும் நடப்பட்டன. புதிய மாணவர்களும், பெற்றோரும் இணைந்து மரக்கன்றுகளை நட்ட பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-18)



# சர்ச்சைக்குள்ளான வாக்காளர் பதிவு

## புத்தளத்துக்கு மாற்றம்

**யாழ்ப்பாணம்,ஜன.8**

**மன்னார் மாவட்டத்தில் சர்ச்சைக்குள்ளான ஆயிரத்து 500 முஸ்லிம் வாக்காளர்களின் பெயர்கள், புத்தளம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

மன்னார் மாவட்டத்தில் வசிக்காத நிலையில் தொடர்ந்தும் மன்னார் மாவட்டத் தேர்தல் பதிவேட்டில், கடந்த பல வருடங்களாகப் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வந்த சிலருடைய பெயர்களை, வாக்காளர் பதிவேட்டில் இணைப்பது தொடர்பில் 2019 ஆம் ஆண்டு பெரும் சர்ச்சை எழுந்தது. அவ்வாறு பதிய மறுத்த ஒரு கிராம அலுவலரும் அச்சுறுத்தப்பட்டிருந்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஓர் இனம் அல்லது மதம் சார்பில் 6 ஆயிரத்து 500 பேரின் பதிவுகளை நீக்கியதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் குற்றம் சாட்டியிருந்தார். அந்தக் குற்றச்சாட்டு தவறானது என்று தெரிவிக்கப்பட்டது. ஏனெனில் இவ்வாறு சர்ச்சைக்குள் அகப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையானது 2 ஆயிரத்தைத் தாண்டவில்லை. இவர்களின் பதிவு தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன. சட்டப்படியான மீளாய்வுக் காலத்தில் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் அவர்கள் வசிக்கவில்லை என்று கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை மன்னாரில் சில கிராமசேவகர்கள் துணிச்சலாகவும், நேர்மையாகவும் செயல்பட முனைந்தபோது நேரடியாகவே அச்சுறுத்தப்பட்டனர். அந்த அச்சுறுத்தல் இந்த வாக்காளர் பட்டியலின் காரணமாகவே எழுந்தது.

அவ்வாறு அச்சுறுத்தப்படுகின்றமை தொடர்பில் கிராம அலுவலர்கள் உதவித் தேர்தல் அதிகாரி ஊடாக உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் ஜனவரி 24 ஆம் திகதியுடன் 2019 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அவர்களின் பதிவு புத்தளம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)



# வெளிச்சம் நிறுவனத்தினர் மாணவர்களுக்கு உதவி

*வவுனியா,ஜன.8*

பாடசாலை மாணவர்கள் 115 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

சுவிஸ் ரிசினோ மாநில தமிழ் இளையோர் அமைப்பின் நிதி அனுசரணையில் வெளிச்சம் நிறுவனத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா விஞ்ஞானங்குளம் நவரத்தினம் வித்தியாலயம், வவுனியா கரப்புக்குத்தி அ.த.க பாடசாலை, முல்லைத்தீவு பனிக்கன்குளம் அ.த.க பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஜ-222)



# நூறு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

*கிளிநொச்சி,ஜன.8*

வாழ்வாதாரத்தில் பின்தங்கிய பரந்தன் செல்வா நகரைச் சேர்ந்த நூறுகுடும்பங்களுக்குஉலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி செல்வாநகர் கந்தன்குளம் ஓம் சக்திவேலன் ஆலயத்தில் வைத்து இவை அண்மையில் வழங்கப்பட்டன.

அகில இலங்கை இந்து சமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் தேசகீர்த்தி வை.மோகனதாஸின் ஏற்பாட்டில், டென்மார்க் அபிராமி அம்மாவின் அவதார விழாவை முன்னிட்டு அபிராமியம்மா சமூகநல அமைப்பின் தலைவர் அ.மாதவனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், அகில இலங்கை இந்து சமயத் தொண்டர் சபையின் சர்வதேசப் பொறுப்பாளரும் ஐரோப்பா ஸ்ரீ வித்தியா பீடத்தின் நிறுவுநருமான ஸ்ரீ தேசகீர்த்தி சிவஸ்ரீஅமிர்த ஸ்ரீக்காந்தன் குருக்கள், அபிராமியம்மா சமூகநல அமைப்பின் இணைப்பாளர் தேவராசா. ஓம் சக்திவேல்ஆலயநிர்வாகிந.கமல், ஆலயப் பூசகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

# கலை விழாவும் பரிசளிப்பும்

*நெடுந்தீவு.ஜன.8*

நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலர் ஜே.எக்ஸ் செல்வநாயகம், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி, நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஹென்றி அன்ரன் மரியதாஸ், உலக தரிசன நிறுவனத்தின் பொருளாதார அபிவிருத்தி ஆலோசகர் இ.ஜெறால்ட் அன்ரனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நெடுந்தீவின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான நான்கு நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றப்படவுள்ளன.

நடன நிகழ்வுகள், பரிசளிப்பு, "கலங்கரை தீபம்" இதழ் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஜ-222)



# முல்லைத்தீவில் முதலிடம் பெற்ற மாணவிக்கு அன்பளிப்பு

*முல்லைத்தீவு, ஜன. 8*

முல்லைத்தீவு மாவட்டத்தில் வணிகப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவிக்கு 5 லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் இரவிச்சந்திரன் யாழினி 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் முதலிடம் பெற்றார்.

இந்த மாணவிக்கு சுமார் 20 பேர் இணைந்து பல்கலைக்கழகக் கல்விக்கான செலவுத் தொகை முழுவதையும் வழங்கினர். போரில் தந்தையை இழந்த இந்த மாணவி தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றார். தாயும் போரில் ஒரு கையை முழுமையாக இழந்தவர்.

நிதி வழங்கும் நிகழ்வு மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் நல்லையா அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மாணவிக்குரிய காசோலையை சம்பிரதாயபூர்வமாக வழங்கினார். இந்த நலத்திட்டத்தை இலண்டன் வாழ் புலம்பெயர் உறவுகள் ஏற்பாடு செய்திருந்தனர். (ந-222)

# இடர் பாதிப்புக் கிராமங்கள் ஆய்வு

யாழ். மாவட்டத்தில் இடர்ப் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான ஏதுக்களின் அடிப்படையில், அனைத்துக் கிராமங்களையும் தரம் பிரித்து அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக கிராமங்களில் ஏற்பட்ட இயற்கை இடர்களின் தாக்கங்கள் மற்றும் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் என்ற அடிப்படையில் தரம் பிரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெள்ளப்பெருக்கு, வறட்சி, குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு, பயிர்ச்செய்கையில் பாதிப்பு போன்ற பல்வேறு குறிகாட்டிகளை அடிப்படையாக வைத்து தரம் பிரித்தல் மேற்கொள்ளப்படும்.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இடர் முகாமைத்துவப் பிரிவு ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாக அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பான பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன. (க-121)



# 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*மன்னார்,ஜன.8*

மன்னார் உப்புக்குளம் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் வசிக்கும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் உப்புக்குளம் பொது மண்டபத்தில் இடம்பெற்றது. முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர், மன்னார் நகரசபை உறுப்பினர் என்.நகுசீன் ஆகியோர் இணைந்து மாணவர்களிடம் இவற்றைக் கையளித்தனர். (ஜ-56)

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

*சாவகச்சேரி. ஜன. 8*

அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினரால் சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை நேற்று முதல் நாளை மறுதினம் வரை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவதிகாரி பணியகத்தினர் நேற்று மட்டுவில் தெற்குப் பிரிவில் நடவடிக்கையை மேற்கொண்டனர். இன்று கைதடி வடக்குப் பிரிவிலும், நாளை சங்கத்தானைப் பிரிவிலும் பரிசோதனை கள் மேற்கொள் ளப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-9)

**வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு**
**விலைமனுக் கோரல் - சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குதல்**
**01.02.2020 தொடக்கம் 31.01.2021 வரை**

வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கிற்குரிய செயலமர்வு/ விழாக்களுக்கான சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குவதற்கு தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.02.2020 தொடக்கம் 31.01.2021 வரையான காலப்பகுதிக்கு வலயக்கல்வி அலுவலக பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

01. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலயக் கல்வி அலுவலகம் வவுனியாவில் கிடைக் கும் கேள்விப்பத்திரம் (Application for Bid Documents) என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக்கட்டணமாக ரூபா 500ஐ காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 08.01.2020 தொடக்கம் 21.01.2020 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 16.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைக்கேள்விகள் 22.01.2020 திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக வலயக்கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்விநேர முடிவில் (10.00 மணிக்கு) விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

03. தகுதிவாய்ந்த மற்றும் இதில் ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின் தொலைபேசி இலக்கம் 024-2222026 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

04. கிடைக்கப் பெற்றவிலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்குஅதிகாரமுள்ளது.

**திரு.மு.இராதாகிருஷ்ணன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**வவுனியா தெற்கு.**

## வீதி விபத்தில் இருவர் காயம்

வீதியின் மறுபக்கம் சென்றது விச்சக்கரவண்டியை ஹயஸ் வாகனம் மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் ஏ/9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

தனியார் கல்வி நிலையத்திலிருந்து சகோதரியை ஏற்றிக்கொண்டு ஏ/9 முதன்மை வீதியைக் கடக்க முற்பட்ட வேளை விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி கச்சாயில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 வயது அண்ணனும், 14 வயது தங்கையும் காயமடைந்தனர். இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில சேர்க்கப்பட்டனர். (ஐ-9,159)



## மரநடுகை

*கிளிநொச்சி, ஜன. 8*

கரைச்சி பிரதேச சபையால் ஆனையிறவில் அமைக்கப்படவுள்ள சுற்றுலா வணிக வளாகத்துக்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக வீதியோரம் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது. கண்டாவளை பிரதேச செயலகம், கரைச்சிப் பிரதேச சபை என்பன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தன. கண்டாவளை பிரதேச செயலர், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் இணைந்து மரக் கன்றுகளை நடுகை செய்தனர். இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

சுற்றுலா வணிக மையத்தின் பணிகள் நிறைவுறும் தருணத்தில் பசுமைச்சூழலை அப்பகுதியில் ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப் பட்டது. (ஐ)

## கணபதி ஹோமம்

நாட்டில் அமைதியும், சமாதானமும் வேண்டி மிருசுவில் உசன் கஜகேணி விநாயகர் கோவிலில் மஹா கணபதி ஹோமம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. இ. கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பிரபல்யமான சிவாச்சார்ரியர்கள் கலந்து கொண்டு ஹோமத்தை நடத்தவுள்ளனர் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

**மரண அறிவித்தல்**



பிறப்பு 16 . 06 . 1940
இறப்பு 05 . 01 . 2020

**இராசையா குலமணிதேவி**

சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குலமணிதேவி கடந்த 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் செல்வராசா, சிவபாலசுந்தரம், குமாரசிங்கம், மல்லிகாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் நடராஜா (கனடா), பத்மினிதேவி (கனடா), பத்மநாதன் (கனடா), செல்வராணி (பொன்மலர் - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாமதேவி (கனடா), மகேஸ்வரி (கனடா), இந்திரகுமார் (கனடா), அனுசாம்பிகை (கனடா), தியாகலிங்கம் (தலைவர் - யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்கள் அதிகாரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசாந், தனுசன், சிவசாந், திவாகர், அஸ்வின், திசான், சுரேகா, சுதர்சன், நவநீதன், லக்சனா, லக்சன் (கனடா), தாரணன் (Mega Phama (Pvt) Ltd), தாருஜன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), சோபிதா (தேசிய கல்வியியற் கல்லூரி - வவுனியா), சிவசுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லதுசனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (மகள்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய பொலிஸ் நிலைய வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**
(CS 11190)(14.17)

**தகவல்: க.தியாகலிங்கம்**
**(மருமகன்)**

**021 224 0038 / 077 696 4814**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம்**

தோற்றம் 05.05.1925
மறைவு 20.12.2018

திதி:- திரயோதசி (08.01.2020)



**எல்லோருக்கும் கிடைக்காது**
**எங்களின் (சிவ) பாக்கியம்**

இருக்கும் போது தெரிவதைவிட
இல்லாதபோதுதான் வெறுமை
மனதை இழுத்துவைத்து
அறுக்கின்றது.
இப்போதுதான் உங்கள்
நினைவுகள் அடிக்கடி வருகின்றது.
எங்கிருந்தோ உங்களின் குரலோசை
கேட்பதுபோன்ற பிரமை.
31வது வயதில்
கணவனை இழந்தும்
யாரிடமும் எதுவுமே
குறைகேட்காமல்
ஒரு நல்ல தாயாக
பிள்ளைகளை வளர்த்தெடுத்து
நல்வாழ்வை அமைத்துத் தந்தீர்கள்.

பேரப் பிள்ளைகளோடு
அதிகம் விளையாடிய
அம்மம்மாவும், அப்பாச்சியும்
நீங்கள் ஒருவர்தான்.
எல்லாப் பேரப்பிள்ளைகளுமே
உங்கள் பாசத்தில்
திளைத்து வளர்ந்தவர்கள்.
தாத்தா, பாட்டிகள்
இருக்கும் வீட்டில் வளரும்
இளைய தலைமுறைகள்
அதிஷ்டசாலிகள் என்றார்கள்.
உண்மைதான்
எத்தனை கதைகள்
எத்தனை நகைச்சுவைகள்
எத்தனை கள்ளத்தீன்கள்
பாசமும், பரிகாசமுமா
பரிமாறியவை இன்றும்

நாவில் ருசிக்கின்றது.
மண்ணெண்ணெய் விளக்கு
வெளிச்சத்தில்
வெற்றிலையை இடித்து
ஒரு சொட்டுத் தந்தாலும்
இன்னும் நினைத்தால்
நாவு சுவைக்கிறது.

பேரப்பிள்ளைகளுடன்
நின்றுவிடாது
பூட்டப் பிள்ளைகளையும்
தூக்கிச் சுமந்து
கொஞ்சி மகிழ்ந்தீர்கள்.
வயதானலும் வைராக்கியம்
குறையாமல் வாழ்ந்தீர்கள்.
துரித உணவுடனும்,
தூங்கி வழியும் பொழுதுடனும்

**“ஆயிரம் பிறை கண்ட செம்மல்”**

நீண்ட ஆயுள் வாழ்வதே
இன்றைய தலைமுறைக்கு
சாதனை என்றாகிப் போனது.
உங்கள் உணவும், நடையுமே
உங்களின் நீண்ட ஆயுளின்
ஆரோக்கிய இரகசியம் - இதனை
யாருக்குக் கற்றுக் கொடுப்பது?
எல்லோருக்கும் கிடைக்காது
எங்களுக்கு கிடைத்த
பாக்கியம் நீங்கள்.
நூற்றாண்டை எட்டித்
தொட்டுவிடும் தூரத்தில்
ஐந்தாவது தலைமுறை
நெருங்கும் தூரத்தில்
நீங்கள் இருந்தும்
இத்தனை அவசரமாகச்
எமைவிட்டுச் சென்றதோனோ..?

(CS/30454)(11,17)

**பிரதான வீதி,**
**பண்ணாகம், சுழிபுரம்.**

உங்கள் நினைவால் உருகும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

உதயன்
புதன் பொய்கை
@UthayanPrint
ஜனவரி 08 2020

# கலாசார அம்சங்கள் நிறைந்த வவுனியா வடக்கு கலாசார விழா

■ குமுதன்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்துடன் இணைந்து வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை நடத்திய கலாசாரவிழா அண்மையில் பிரதேசசெயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் வவு னியா வளாக முதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார்.

நிகழ்வுக்கான வரவேற்புரையை உதவி பிரதேச செயலர் த.தர்மேந்திரா வழங்க, வரவேற்பு நடனத்தை நிருத்திய கலாசேத்திர நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங் கினர்.

இதன்போது வவுனியா வடக்கு மக்களின் கலை, கலாசார பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் வகையில் நாட் டிய நாடகங்கள், கிராமிய நடனம், உரை ஓவியம், பாரம் பரிய கலை நிகழ்ச்சிகள், விவாதச் சமர் என்பன இடம் பெற்றன. அவை நிகழ்வை மேலும் மெருகூட்டின.

விசேடமாக பிரதேசத்தின் பிரதிபலிப்பாக 'மருதமுகில் 9' கலை இலக்கிய பண்பாட்டு மலர் வெளியிடப்பட்டது. ஆய் வுரையைப் புளியங்குளம் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் க.ஜெயசந்திரன் வழங்க ஏற்புரையை நூலாசிரியர் ஜெ.திருவரங்கன் வழங்கினார்.


நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேசத்தின் மொழி, கலை கலாசார, பண்பாட்டு ரீதியில் இயல், இசை நாடகத் துறை யில் பங்களிப்புச் செய்தவர்கள் கௌரவிக்கப்பட்டு கலைத்தென்றல் மற்றும் இளங்கலைத்தென்றல் விரு தும் வழங்கப்பட்டன.

வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், பிரதேச சபை தவிசாளர் இ.தணிகாசலம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். ■





> கலை, கலாசார பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் வகையில் நாட்டிய நாடகங்கள், கிராமிய நடனம், உரை ஓவியம், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், விவாதச் சமர் என்பன இடம்பெற்றன.











# அடியவர் தம் உள்ளத்தில் தித்திக்கும் தெள்ளமுதே



அன்னையின் அறக்கொடைப் பெருவிழா 07.01.2020 நேற்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.

# அன்னை தங்கம்மா

■ கே.எஸ்.சிவஞானராஜா

எனக்கு உள்ளனவெல்லாம் அன்றே உனதென்று அளித்துவிட்டவர்தான் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி. அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதியிலே தொண்ணூற்று ஐந்தாவது பாடலை அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அடிக்கடி முன்மொழிந்து தியானிப்பது அம்பாளின் கடாட்சமென நாமும் பணியலாம்.

*''நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்*
*அறிவது*
*ஒன்றேயும் இல்லை. உனக்கே பரம் எனக்கு*
*உள்ளவெல்லாம்*
*அன்றே உனதென்று அளித்துவிட்டேன்*
*அழியாத குணக்குன்றே*
*அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே!"*

அள்ளிக் கொடுப்பாள், அடியார் மிடிகள் அகன்றிடவே துள்ளிக் குதிப்பாள், பகைஞர் நடுநடுங்கத் துடியடிப்பாள், வெள்ளிப் பிரம்பை விசுக்குவாள், சூலத்தை வீசியே விளங்கி நிற்பாள், கள்ளக்கபடர் வெருண்டோடிடவே அம்பாளை நெஞ்சிலிருத்தி தெல்லிப்பழை தன்னிலே வரம்பெறுமாறு உலகமதையே கைகூப்பவைத்த பெருந்தகையே அன்னை சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார்.

அடியாரைத் தாங்கும் பேரின்ப வல்லியாக ஆரவாரமில்லாத அருட்பெருங்கடலாக விடியாத வாழ்வினை விடிவிப்பாளாக வினைப் பயனை அடியோடு விரட்டிவிடும் வித்தகியாக குடிமனைகள் தோறும் கோபுரமாக, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து அரவணைக்கும் தாயவளாகத் துர்க்கை அம்பாளின் மடியில் தவழ்ந்தவர்தான் அன்னை தங்கம்மா ஆவார். அறத்தின் சிகரமாகத் திகழ்ந்தவர். ஆழ்ந்த சமயத்தின் பேரொளியாக வாழ்ந்தவர். சிவபூமிக்குத் தவமாக அவதரித்தவர். சிவபூமியை வரமாக்கியவர். சிவபூமிக்கு மகிமை சேர்த்தவர். சிவபூமிக்கு வழிகாட்டியவர்.

உலகிற்கு நன்மை செய்வதென்பது நமது நோக்கமே தவிர, நமது பெயர்களை எங்கும் பறைசாற்றுவதல்ல என்று சுவாமி விவேகானந்தர் கூறிய அருள்மொழியோடு ஒன்றி வாழ்ந்தவர். உறுதிபூண்டு வாழ்ந்தவர்.

உங்கள் அனைவரிடமும் நான் வேண்டுவது ஒன்றே. உங்களின் தற்பெருமையை வளர்ப்பதையும் பிரிவு மனப்பான்மையையும் பொறாமையையும் என்றைக்குமே ஒழித்துவிட வேண்டும். உங்களால் இதை அடைய முடியுமானால் உலகமே உங்கள் காலடியில் வந்து அமரும்.

இஃதெல்லாவற்றையும் சுமந்தவாறு வலி. வடக்கிலே ஓர் ஒளிக்கீற்று விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்துதித்தாற்போல் 1925ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதியன்று அப்பாக்குட்டி என்பவருக்கும் தையற்பிள்ளை என்பவருக்கும் பொன் மகவாகப் பிறந்தவர்தான் 'தங்கம்மா ' எனும் நாமமுடைய தெய்வக் குழந்தையாவார்.

**ஆன்மிகத்துடன் சிறுபராயம்**

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக 'தங்கம்' பேறாத மூன்று வயதில் சம்பந்தர் தோணியப்பரை வியந்து பாடியது போல தங்கம்மாவும் மாவிட்டபுரம் கந்தப்பெருமானை 1928ஆம் ஆண்டு நடைபெற்ற கார்த்திகைப் பெருவிழாவில் தேவாரமும் புராணமும் பாடினார். இவரையும் அடியார்களையும் ஆட்கொண்ட தேவாரம் சம்பந்தப்பெருமான் வாழ்த்தவும் வாழவும் தேற்றவும் தித்திக்கவும் பாடிய தேவாரம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற மங்கலம் பெருகும் பாடலாகும்.



நல்ல ஒலி அலைகள் பரவி மங்கலம் பெருகவும் இப்பிறப்பில் கல்விக் கேள்விகள் செல்வ நெடுமாடம் பெருகவும் வாழ்வாங்கு வாழவும் பாட வேண்டியவாறு தங்கம்மா எனும் நங்காள் இற்றைக்கு தொண்ணூறு வருடங்களுக்கு முன்னாலே ஓதியுள்ளார்.

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்*
*வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர்*
*குறைவில்லைக்*
*கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்*
*பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை*
*இருந்ததே"*

எம்பெருமானின் ஆசியையும் எம்பெருமாட்டியின் கருணையினையும் தங்கம்மா அன்றே பெற்றுக் கொண்ட காரணத்தினால் தெல்லிப்பழை துர்க்கா அம்பாள் ஆலயத்தை வானவரும் மண்ணவரும் போற்றும்படியாக அற்புதக் கோவிலாக்கி அதிசயமாக்கியுள்ளார்.

ஆசிரியையாக, பண்டிதராக, சைவப்புலவராக, ஆன்மிகத் தாயாக, தித்திக்கும் சொற்பொழிவாளராக, பதிப்பாசிரியராக, நூலாசிரியராக, சமூக சேவகியாக, அறத்தின் பெருமாட்டியாக அறத்தின் உபகாரியாக 83 வருடங்கள் இவ்வுலகில் கண்கண்ட தெய்வமாகக் காட்சி தந்தார்.

**பேச்சாற்றல் மிக்கவர்**

1961ஆம் ஆண்டிலிருந்து அவரது பேச்சு இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியதன் பேறாக உலகம் இவர்பால் குடிகொண்டது. சைவ உலகம் இவர் பேச்சுக்காய் தவமிருந்தது. பல்கலைக் கழகங்கள் இவரிடம் சைவ விழுமியங்களையும் அறங்களையும் கற்றுக் கொண்டன. அதன் பிரகாரம் 1998இல் கௌரவ கலாநிதிப் பட்டம் யாழ். பல்கலைக்கழகத்தால் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டது. இவரது அறம் தெல்லியூர் துர்க்கா புரத்தில் சித்திபெற்றதனால் இன்றும் என்றும் அங்கு விளைந்து பெருகிறது.

பகவதியாரின் குழந்தை மூன்று வயதில் தேவாரம் பாடியது போல அன்னை தங்கம்மாவின் குழந்தை திருமுருகன் அவரது பணியை தவமாய் முன்னெடுத்து அன்னையைப் பேறாக்குகின்றார்.

வருடா வருடம் தை மாதம் ஏழாம் திகதி உலகம் அன்னையைத் தெய்வமாகப் போற்றி அறக்கொடைக்கான விழாவாகத் தெல்லியூர் துர்க்காபுரத் தேவஸ்தான மண்டபத்தில் கொண்டாடுகிறார்கள். துர்க்கை அம்பாள் மகிமும் இந்நாளில் என்றும் நீடு வெல்வதாக!

# இலக்கிய விழாவும் மலர் வெளியீடும்

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து ஓட்டமாவடி பிரதேச செயலகம் நடத்திய பிரதேச கலாசார இலக்கிய விழாவும் மருதோன்றி 8ஆவது மலர் வெளியீட்டு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌஜூத் தலைமையில் ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன், சிறப்பு விருந்தி னராக மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.









# மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய விழா

மட்டக்களப்பு மாவட்டத்தின் விழுமியங்களையும், தொன்மைகளையும், கலாசார பண்புகள் மற்றும் மட்டக்களப்பிற்கே உரித்தான கலைகள் அவற்றின்பாலெழுந்த படைப்புக்களையும் முழு உலகுக்கு அறியச் செய்வதற்கான அர்த்தமிகு நிகழ்வாக 2019ஆம் வருடத்திற்கான மாவட்ட இலக்கிய விழா மாவட்ட கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா.உதயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்டத்தின் பாரம்பரியங்களையும், மண்ணுக்குரித்தான தன்னிறைவுச் சுவடுகளையும் பேணும் நோக்கில் இந்த நிகழ்வுகள் மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றன.

நிகழ்விற்கு பிரதம அதிதிகளாகக் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் மற்றும் ஓய்வு பெற்ற இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் கே.எம்.எம்.ஷரீப் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.




## சமாதான நீதிவான்



பரமு குகராஜா கடந்த மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் இவர் கோண்டாவில் றோ.ம.த.க.பாடசாலை, பரமேஸ்வராக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும், யாழ். இந்துக்கல்லூரி ஆய்வு கூட உதவியாளரும், கோண்டாவில் தேவ சபையின் பொருளாளரும், நாராயண கலை கழக நிர்வாக உறுப்பினரும் சமூக சேவையாளரும் ஆவார்.



# மோட்சம் நல்கும் வைகுண்ட ஏகாதசி

இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்

ஆதி அந்தம் இல்லாது சனாதன தர்மம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற எம் இந்து மதம் தனில் இந்து மக்களின் வாழ்வியலுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பன விரதங்கள் ஆகும். பல தெய்வங்களின் வழிபாட்டினைக் கொண்டிருக்கும் எம் இந்து மதத்தில் ஒவ்வொரு கடவுளருக்கென்று பல்வேறு விரதங்கள் கடைப்பிடிக்கப் படுகின்றன. விரதங்கள் அனைத்தும் மகிமையும், சிறப்பும் வாய்ந்தவை. அவை எம் மனதில் இறை உணர்வினை ஏற்படுத்துபவையாகும்.

எத்தனை விரதங்களாயினும் அவற்றின் நோக்கம் இறைவனது திருவரு ளைப் பெறுவதேயாகும்.

## விஷ்ணுவுக்குரியது ஏகாதசி விரதம்

உலகின் உயிர்களைக் காத்து அருள்கின்றவர் விஷ்ணு பகவான். மும்மூர்த்தி களில் ஒருவராக விளங்கும் கருணைக் கடவுள்.

பூமியில் தர்மம் நலிவடைந்து அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம் அவதாரம் மேற்கொண்டு தர்மத்தை நிலை நாட்டும் அவதாரப் பிரியன்.

அத்தகைய ஸ்ரீமன் நாராயணனுக்குரிய விரதங்களில் ஏகாதசி விரதம் சிறப்புடை யதாகும். சிவ பெருமானுக்கு பிரதோசம் போல, முருகனுக்கு கார்த்திகை போல, பிள்ளையாருக்கு சதுர்த்தி போல விஷ்ணுவுக்குரியது ஏகாதசி. ஒரு முறை பார்வதி தேவி சிவபெரு மானிடம் சுவாமி, விரதங்களில் சிறந்த விரதம் யாது? எனக் கேட்டார்.

அதற்கு சிவபெருமான், தேவி, எத்தனை விரதங்கள் இருப்பினும் அவற்றில் ஏகாதசி விரதமே மிகச் சிறந்த விரதமாகும். பாவங்களைப் போக்கும் விரதம் அது.

மேலும், அஸ்வமேத யாகம் செய்த பலனை ஒருவனுக்கு அளிப்பது இந்த விரதமாகும். சொர்க்கத்தில் வசிக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்த விரதத்தைக் கடைப்பிடித்து பாற்கடல் வாசனின் திருவருள் பெறுகின்ற நல் விரதமாக இது விளங்குகின்றது என உரைத்தார் கைலாசவாசன்.

## ஏகாதசி விரதம் தோன்றிய வரலாறு

இத்தகைய ஏகாதசி விரதத்தின் தோற்றம் பற்றி நம் புராணங்களில் அழகிய புராணக் கதையொன்று சான்றாக அமைகின்றது.

தேவர்கள் மீது எப்போதும் அசுரர்கள் பகைமை எனும் உணர்வையே வெளிக் காட்டி வருபவர்கள். இந்த நிலையில் அசுரர்களால் தேவர்களுக்கு ஏற்படும் துயர்களைப் போக்கியருள்பவர் ஸ்ரீமன் நாராயணனே. அவ்வாறு ஒரு முறை தேவர்களுக்காக அசுரர்களுடன் நீண்ட காலமாகப் போர் செய்தமையால், பகவான் விஷ்ணு மிகுந்த களைப்படைகின்றார்.



இதனால் யுத்தகளத்தில் இருந்து வெளியேறி, ஒரு குகையொன்றில் உறங்கிக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த முரன் எனும் அசுரன் தனியாக விஷ்ணுவைக் கொல்லும் நோக்கில் குகையினுள் பிரவேசித்தான். அவன் பகவானின் அருகே நெருங்கும் போது, விஷ்ணுவின் திருமேனியில் இருந்து அவரின் மாயா சக்தியானது பெண் வடிவில் வெளிப்பட்டு அசுரனைக் கொன்று விட்டது.

உறக்கம் நீங்கி கண் விழித்த திருமால் நடந்த நிகழ்வை அறிந்து, அங்கு நின்ற மாயா சக்திக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு, இன்று முதல் யாரெல்லாம் உன் பெயரால் விரதமிருந்து என்னை வழிபட்டு வருகின்றனரோ, அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்து அவர்களுக்கு திருவருள் பாலித்து அருள் புரிவேன் எனக்கூறி அந்தச் சக்தியை தன்னுள் அடக்கிக் கொண்டார்.

இவ்வாறே ஏகாதசி விரதம் தோற்றம் பெற்றது.

அன்றிலிருந்து ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடிக்கும் மரபு தொடங்கியது எனலாம். அவ் வகையில் விஷ்ணுவுக்குரிய இந்த ஏகாதசி விரதம் மாதம் ஒன்றில் வளர்பிறை ஏகாதசி, தேய்பிறை ஏகாதசி என இரு விரத நாள்கள் வரும்.

ஆகவே வருடமொன்றில் 24 (காலக்கணிப்பில் சில சமயம் 25) ஏகாதசி விரத நாள்கள் வருகின்றன.

## மேன்மை தங்கிய வைகுண்ட ஏகாதசி

ஆம். இவ்வாறான ஏகாதசி விரதங்களில் மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி விரதம் தனிச் சிறப்பும் மகத்துவமும் உடையது என நம் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. மோட்ச ஏகாதசி, சுவர்க்க வாயில் ஏகாதசி, முக்கோடி ஏகாதசி எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது இது.

காயத்திரியை விட சிறந்த மந்திரமில்லை, தாயில் சிறந்த கோயிலில்லை, கங்கையை விட சிறந்த தீர்த்தமில்லை, திருமாலை விட உயர்ந்த தேவரில்லை, அது போல ஏகாதசியைப் போல சிறந்த விரதமில்லை என்கின்றன புராணங்கள். அத்தகு ஏகாதசிகளில் மார்கழி மாதத்தில் வருகின்ற வைகுண்ட ஏகாதசி விரதமே அதி உன்னதமான ஏகாதசியாக விளங்குகின்றது.

வைகுண்ட ஏகாதசி விரதம் ஏனைய அனைத்து ஏகாதசி விரதங்களின் பலன்களை ஒரு சேரத் தரவல்லதாகும்.

## வைகுண்ட ஏகாதசி விரத நியதிகள்

வைகுண்ட ஏகாதசி விரதம் கடைப்பிடிப்பவர்கள் நாள் முழுவதும் உணவு உண்ணாது உபவாசம் இருந்து இவ்விரதத்தை கடைப்பிடிப்பது சாலச்சிறந்தது. அவ்வாறு இருக்க முடியாதவர்கள் கிழங்கு, பால் என்பவற்றை கைக்கொண்டு விரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.

மறு நாள் துவாதசியில் காலை பாறணை செய்து விரதத்தை நிறைவு செய்வது இதன் நியதியாகும். சிவராத்திரி விரதத்தைப் போலவே இந்த விரதமும் நான்கு சாமப் பூசை வழிபாடுகளைக் கொண்டது.

அன்றைய நாளில், தீயவை எதுவும் புரியாது, பகவான் விஷ்ணுவின் நினைப்பில் மனதை இருத்த வேண்டும். மேலும், திருமாலின் பெருமை கூறும் புராணங்களைப் படித்தல், நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாடல்களை படித்தல், விஷ்ணுவின் திவ்ய நாமங்களை உரைத்தல், நாமசங்கீர்த்தனம் செய்தல் என்பவற்றைச் செய்வது உத்தமம்.

## விஷ்ணு ஆலயங்களில் சிறப்புறும் வைகுண்ட ஏகாதசி

விஷ்ணு ஆலயங்களில் இவ் விரத வழிபாடு வெகு சிறப்பாக நடைபெறும், ஆகவே விரதம் கடைப்பிடிப்பவர்களும், ஏனைய அடியவர்கள் அனைவரும் அன்றைய தினம் திருமால் ஆலயம் சென்று, விரதமி ருந்து, வழிபாடியற்றி ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்வதோடு பஜனை மற்றும் நாம சங்கீர்த்தனம், சமய சொற்பொழிவுகள் முதலி யவற்றிலும் மனதைச் செலுத்தி வருவது நன்மை பயக்கும்.

## வைகுண்ட வாசல் திறத்தல்

வைகுண்ட ஏகாதசி நாளிலே விஷ்ணு ஆலயங்களில் நடைபெறும் ஓர் தெய்வீகமான தரிசனம் சொர்க்கவாசல் திறத்தல் அல்லது வைகுண்ட வாசல் திறத்தல் ஆகும்.

இன்றைய தினத்தில் விஷ்ணு பகவான் வைகுண்ட லோகத்திலிருந்து சொர்க்க லோகம் வருகை தந்து தன் பக்தர்களுக்கு திருவருள் பாலிக்கின்றார் என்கின்றன புராணங்கள்.

இதனை வெளிப்படுத்தும் வகையிலேயே அன்றைய தினத்தில் விஷ்ணு ஆலயங்களில், சுவர்க்க வாயில் திறத்தல் அல்லது வைகுண்ட வாசல் திறத்தல் எனும் அதி உயர் செயற்பாடு சிறப்புற நடைபெறும்.

ஆகவே தான் இந்த நாளில் தங்கள் வாழ்வின் விதி முடிந்து உயிர் துறக்கின்றவர்கள் எத்தகு பாவங்கள் புரிந்தி ருப்பினும் அவர்கள் பாவங்கள் நீங்கி அக்கணமே சொர்க்கலோகம் தனை வந்தடைவர் என்பது உறுதியான மொழியாகும். மேலும் இந்த நாளில் இறந்த முன்னோர்களுக்கான மோட்ச அர்ச்சனை செய்தல் எனும் அரிய கைங்கரியமும் நடைபெறுவது குறிப்பி ட்த்தக்கதாகும்.

## வைகுண்ட வாசன் திருவருள் பெறுவோம்

ஆகவே இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட இவ் வைகுண்ட ஏகாதசி விரத நன்னாளில், இந்த விரதத்தி னைக் கடைப்பிடித்து தாமரை போன்ற கண்களைக் கொண்டவனும், அகன்ற தேவர் உலகத்தவரால் போற்றப்படுபவனும், வாசனை மிகுந்த குளிர்ச்சியான துளசி மாலையை அணிந்தவனும், திருமகள் விருப்புடன் பாத பூஜை செய்யப் பெற்றவனும், அடியவர் குறைகளை போக்கியருள்பவனுமாகிய பகவான் விஷ்ணுவின் திருவருள் எனும் கருணையைப் பெற்று வாழ்வின் இறுதி இலக்கான மோட்சம் எனும் நிலையைப் பெறுவோமாக;

# அருகிவரும் அம்மானை!

## உலகத் தமிழிசை மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் சென்னை உலகத் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய முதலாவது உலகத் தமிழிசை மாநாடு மதுரை உலக தமிழ்ச் சங்கத்தில் கடந்த 14ஆம், 15ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

மாநாட்டு ஒருங்கிணைப்புத் தலைவர் முனைவர் கோ. விசயராகவன், மாநாட்டு இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.அன்புச்செழியன், மாநாட்டு ஒருங்கிணைப்புச் செயலர் முனைவர் கு.சிதம்பரம் ஆகியோர் தலைமையில் மாநாடு நடைபெற்றது. மேற்படி மாநாட்டில் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் கலந்து கொண்டு அருகிப்போகும் அம்மானை இசை வடிவமும் ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானையும் ஒரு நோக்கு என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். அவரது ஆய்வின் சுருக்கம் பின்வருமாறு அமைந்தது.

அம்மானை என்பது மூன்று பெண்கள் சேர்ந்து ஆடும் ஒரு கல் விளையாட்டு ஆகும். மூன்று பெண்கள் அமர்ந்து கொண்டு கற்களால் செய்யப்பட்ட ஒருவிதமான காயை வீசிப் பிடித்து அம்மானை விளையாட்டை விளையாடுவார்கள்.

பழங்காலத்தில் இந்த விளையாட்டை ஆடும்போது இலக்கிய நயம் ததும்பும் பாடல்களைப் பாடி விளையாடியதால் அந்தப் பாடல்கள் அம்மானை எனப் பெயர் பெற்றன. இவ்விளையாட்டு அம்மானை விளையாட்டு எனப் பெயர் பெற்றது.

இரண்டு இரண்டு வரிகள் கொண்டதான ஆறு வரிப் பாடலாக முழுமையாக அமையும் இப்பாடலின் ஒவ்வொரு இரண்டு வரியின் இறுதியிலும் அம்மானை என்ற சொல் இருக்கும். இந்த அம்மானை என்ற சொல் எனது பாடல் முடிந்து விட்டது அடுத்தவர் தன் பாடலை ஆரம்பிக்கலாம் என்ற அறிவிப்பைத்; தருவதாக அமையும். அம்மானை என்ற சொல்லுடன் இப்பாடலின் இரண்டு இரண்டு வரிகள்; முடிவதாலும் இது அம்மானை என அழைக்கப்படுகிறது என்றும் எடுக்கலாம்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதலாவது அம்மானையான சந்தியோகுமையோர் அம்மானை ஸ்பானியருக்கும் இஸ்லாம் சமயத்தினருக்கும் இடையே நடந்த போர் பற்றியே கூறுகின்றது.

கிளாலி சந்தியோகுமையார் ஆலயத்தில் யூலை மாதம் 25ஆம் திகதி திருவிழா நடைபெறுவது வழமையாகும். அக்காலத்தில் அவ்வாலயத்துக்கு திருவிழாக் கொண்டாட பக்தர்கள் ஆண்டுதோறும் பல ஊர்களில் இருந்தும் பெருமளவில் சென்றனர். குறிப்பாக அவர்களது நலன் கருதி இந்த சந்தியாகுமையோர் அம்மானை இயற்றப்பெற்றதென்பதை புலவர் அவர்களே நூலில் கூறியுள்ளார்.

இந்த சந்தியோகுமையோர் அம்மானை 2020ஆம் ஆண்டு யூலை திருவிழாவின்போது செபஸ்தியாம்பிள்ளை பாலதாஸ் கல்யாணி தம்பதியினரால் மறுபதிப்புச் செய்யப்படுகிறது என்பது விசேட தகவலாகும்.

அம்மானை என்ற இசைவடிவம் பாரம்பரிய பழைய இசைவடிவம். இந்த இசைவடிவம் பரம்பரை வாழ்வு கிராமிய அமைப்பு கூட்டுக் குடும்பம் என்பன எல்லாம் மிக இறுக்கமாகவும் மிக நுணுக்கமாகவும் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு காலத்தில் சிறப்பாக இருந்தது. ஆனால் இன்று பெரிய பரம்பரை இடைவெளி ஒன்று தோன்றியுள்ளது. அம்மானை என்ற இசை வடிவம் இன்று அருகிப்போய் வருவது வேதனைக்குரியதாகும்.

# வாசிப்பை நேசித்த பலமே அளவை அலம்

கே.எஸ்.சிவஞானராஜா

வாசிக்கும் பழக்கத்தைக் கருவில் இருக்கும் குழந்தையிடமிருந்து ஆரம்பிப்போம் என்ற கருப்பொருள் பிரகாசிக்கும்படியாக, சிறுவர்களை மையப் பொருளாக அரவணைத்து சமூக மட்டத்திலும் தேசிய நிலையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது அளவெட்டி பொதுநூலகம். இந்த நூலகம் தான் சார்ந்த வலிவடக்குப் பிரதேசசபையோடு வரமாகி மேற்படி வாரத்தைச் சிறப்பாக்கிச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

தாம் சார்ந்த பாடசாலைகள் மற்றும் வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், வாசகர்கள், வழிப்போக்கர்கள், வங்கிகள், மத வழிபாட்டுத் தலங்கள் மத்தியில் அளவெட்டி பொது நூலகமானது தன்னை வாசகர்களது மனங்களினால் வெல்ல வைத்துள்ளது.

அளவெட்டி என்பது அளவு கொண்டு இனிக்கும். அளவு கடந்தும் இனிக்கும் என்ற தோரணையில் பல்வேறு விடயதானங்களைத் தாங்கி அளவை அலம் சிறப்பு மலர் 2 அண்மையில் வாசகர்களுக்காக வெளிவந்துள்ளது. நல்லதோர் சஞ்சிகை. வாசியுங்கள் புரியும்.

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விடப்பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே. இந்தநூலை வாசித்தபின்னர் பேனாவைக் கையிலெடுத்துப் பாருங்கள். பேனா தானாக எழுதும். அது யாரோ ஒருவரை உங்களிடத்தே வினாத்தொடுக்க வைக்கும். பேசவும் வைக்கும்.

திருமதி த.போல்சுரேஸ், வ.நல்லதம்பி, செல்வி க.தனுஷிகா, ச.கஜீலன் (சண்முகவன்), திருமதி ம.கௌரீசன். அதிபர் சி.சிவகுமாரன், வணக்கத்துக்குரிய அலோசியஸ் சசிகரன், கி.அனிதா, சி.அனுஷியா, க.சௌந்தராஜா சர்மா, சு.விஷ்ணுஜன். ஜீ.சோமிகா, பெ.தனராசா, த.விதுஷன் ஆகிய படைப்பாளிகளோடு நீங்கள் வெல்லப்படுவீர்கள். வேண்டப்படுவீர்கள். இது வாசிப்பின் சுவாசிப்பால் வரும் நேசிப்பாகும்.

முன்பு ஒரு காலம் அளவெட்டி சுருட்டுக் கொட்டிலிலே நாளாந்தம் ஒருவர் மாதாந்த சம்பள அடிப்படையில் தினசரி நாளிதழான ஈழநாடு வாசிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். அதனால் தொழிலாளர்கள் கல்வி அறிவு கேள்விகளால் அளவை மக்களின் அறிஞர்களோடு சரி சமனாக வென்று வாழ்வு பெற்றனர். அந்தக் காலம் ஒரு சுவர்க்கமாகி இருந்தது.





பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கடந்த 4ஆம் திகதி 'வெற்றிக்கு வலிகள் தேவை' என்னும் நூல் அறிமுகம் இடம் பெற்றது. (ம)







'ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த தார்மீக சமுதாயம் ஒன்றை உருவாக்கல்' எனும் தொனிப் பொருளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகமும் கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியமும் இணைந்து தெய்வீக கிராம எழுச்சி மற்றும் இந்து எழுச்சி ஊர்வலமொன்றை அண்மையில் நடத்தின. (ம)

# அணு ஒப்பந்தத்தை முறித்தது ஈரான்




தெஹ்றான், ஜன. 8
வல்லரசு நாடுகளுடன் கொண்டிருந்த அணுவாயுத ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதாக ஈரான் அறிவித்துள்ளது.
அணு ஆயுதங்களை அதிக அளவில் கையிருப்பு வைத்து, பிறநாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திவந்த ஈரானுடன் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய 6 வல்லரசு நாடுகள் கடந்த 2015ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தின.
அணுசக்தி ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி ஈரான் தனது அணு ஆயுதக் கையிருப்பை படிப்படியாகக் குறைக்க வேண்டும். அதற்கு பிரதிபயனாக அந்த நாட்டின் மீது விதித்த பொருளாதாரத் தடைகளை மேற்கூறிய வல்லரசு நாடுகள் திரும்பப்பெற வேண்டும்.
ஈரானுடனான இந்த அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்தாண்டு அறிவித்தார். மேலும் ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தார்.
இதன்காரணமாக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே மோதல் வெடித்தது. அதனைத் தொடர்ந்து அணுசக்தி ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் புறக்கணிப்பதாக ஈரான் படிப்படியாக அறிவித்து வந்தது. அதன்படி அணுசக்தி ஒப்பந்தத்தின் 5 நிபந்தனைகளில் 4 நிபந்தனைகளை ஈரான் நிராகரித்தது.
இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே அமெரிக்க ராணுவம் நடத்திய வான் தாக்குதலில் ஈரான் ராணுவ தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டார்.
இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் வலுவடைந்து போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.
இந்த நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாக ரத்துச் செய்துவிட்டதாக ஈரான் அறிவித்துள்ளது. தலைநகர் தெஹ்றானில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**கரைச்சி பிரதேசசபை**
**வழங்குநரைப் பதிவு செய்தல்**
**திகதி மாற்றம்**

மேற்படி கடந்த 22.12.2019 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட வழங்குநரைப்பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 31.01.2020 ஆக கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**தவிசாளர்**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**
(IN 12233)(14.17)





# காட்டுத் தீ இழப்பீடுகளுக்கென 30,000 கோடி!

கொழும்பு, ஜன. 8
ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள இமாலயக் காட்டுத் தீக்கான நிவாரணத் தொகையாக இலங்கை மதிப்பில் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
ஆஸ்திரேலியாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள நியூசவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரியா மாகாணங்களில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் காட்டுத்தீ பரவி வருகின்றது. இந்த காட்டுத்தீயில் இதுவரை 24 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.
மேலும் பல ஆயிரக்கணக்கான வன உயிரினங்கள் மடிந்துள்ளன.
லட்சக்கணக்கான மக்கள் கடும் தவிப்புக்கு ஆளாகி உள்ளனர். சுமார் ஒன்றரைக் கோடி ஏக்கர் நிலப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.
இந்த நிலையில் காட்டுத் தீ நிவாரணத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது ஆஸ்திரேலியா. (ம)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**கண்ணிவெடி அகற்றுநர்களுக்கான பதவி வெற்றிடம்**

ஹேலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.
ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடி அகற்றலானது துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர். அவர்கள் அனைவரும் தங்களது விண்ணப்பங்களில் தங்களுக்கான பழைய பணியாளர் இலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

பெண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக்கோவைகளை எதிர்வரும் 16ஆம் திகதி தை மாதம் 2020 வியாழக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

**15ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**கணபதிப்பிள்ளை குணசிங்கம்**

மண்ணில் மகிழ: 18 . 07 . 1933
மண்ணில் நெகிழ: 24 . 12 . 2004
திதி: திரியோதசி (08.01.2020)

அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து 15 ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் அழியாத நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

44/2, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

நீங்காத நினைவுடன்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

பிறப்பு 04 . 06 . 1936



இறப்பு 02 . 01 . 2020

**மாட்டீன் திரேசம்மா**

ஜோன்ராசா வீதி, கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாட்டீன் திரேசம்மா 02.01.2020 அன்று வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (08.01.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து முற்பகல் 9.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித சூசையப்பர் உத்தான பூமியில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜோன்ராசா வீதி,
கைத்தொழிற்பேட்டை,
தென்மூலை அச்சுவேலி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

077 809 9765
(c23037)(13.17)

## கோத்தாவின்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரை தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் இன்னும் பயணிக்க வேண்டியிருக்கின்றது. இந்த நாடு செழிப்படைய வேண்டும் என்றால் நாம் அதே நோக்கில் பயணிக்க வேண்டும். மாறாக அந்தப் பாதையில் இருந்து விலகும் எத்தகைய நடவடிக்கையும் எம் அனைவரையும் அழிவுக்கே இட்டுச் செல்லும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனமானது கடந்த மூன்று தசாப்தங்களாக ஆட்சி புரிந்த அரசுகளின் பொதுவான திசையிலிருந்து விலகிச் செல்லுகின்ற அறிகுறிகளைக் கொண்டிருப்பதால் இது மிக அவதானமாக விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஜனாதிபதி கடந்த நவம்பர் மாதம் 16ஆம் திகதி மிக முக்கியமான வெற்றியைப் பெற்றுக்கொண்டார். இந்த வெற்றியில் காணப்படும் பிரச்சினைக்குரிய விடயம் யாதெனில் பெரும்பான்மையான சிங்கள பௌத்த மக்களைத் தவிர ஏனைய மக்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைப்பதற்குத் தயாராக இல்லை என்பதாகும். இதை எவ்விதத்திலும் ஜனாதிபதி மீது அவதூறு கொண்டுவரும் நோக்கில் நான் கூறவில்லை. மாறாக தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒன்றிணைந்த நாடாக நாம் இருக்க வேண்டும் என்பதில் கரிசனையாக இருந்தால், இத்தகைய ஒரு முக்கியமான அம்சத்தை நாம் புறக்கணிக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டவே இந்தக் கருத்தை முன்வைக்கின்றேன்.

ஒரு நாட்டின் செல்வாக்குமிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்விலே அவரது சொந்த மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கின்றார்களா என்பது முக்கியமானது அல்ல. மாறாக ஏனைய மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கத் தயாராக உள்ளார்களா என்பதே முக்கியமாகும். துரதிர்ஷ்டவசமாக இது இன்னும் தேடப்படுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஜனாதிபதி தனது வெற்றிக்குப் பின் வெளியிட்ட இரண்டு கருத்துக்களில் இந்த விடயம் தொடர்பில் தாம் தெளிவான விளக்கத்துடனேயே உள்ளார் என்பதை வெளிப்படுத்தியிருந்தார். தனது பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி இதனை மிகத்தெளிவாக " தான் முழு நாட்டுக்கும் ஜனாதிபதி. தனக்கு வாக்களிக்காதவர்களுக்கும் தானே ஜனாதிபதி "என்பதனையும்சேர்த்தே கூறியிருந்தார்.

எமது நாடானது பல்வேறு கலாசாரங்கள், மொழிகள், சமயங்கள், இனங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் பன்முகத்தன்மை கொண்ட மக்கள் குழுக்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதி இந்த இடைவெளியை குறைக்க நடவடிக்கை எடுப்பார் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இந்த ஒவ்வொரு மக்களின் சமத்துவம் என்பது அவர்களின் எண்ணிக்கையின் பலத்திலே தங்கியிருக்கவில்லை. ஜனநாயகமானது தப்பிப்பிழைக்கவும், செழிப்படையவும் வேண்டுமேயன்றி வெளிப்படையான பேரினவாதத்தை நோக்கிச் செல்லாமல் இருக்க வேண்டுமென்றால், இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் கவலைக்கிடமாக இந்த மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அத்தகைய பின்னடைவான ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

பிரச்சினை உருவாவதற்கு வழி சமைத்து அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து மூன்று தசாப்தங்களாக பல தீமைகளைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த எமது நாட்டின் தலைவர்களின் பின்னடைவான சிந்தனைக்கு ஒத்த சிந்தனையாக அது அமைந்திருந்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தின் பேரினவாத செயற்பாடு காரணமாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி எனும் இன அடிப்படையிலான ஒரு கட்சி உருவாவதற்கான தேவை உண்டாகியது என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போர் முடிவடைந்ததும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை அரசியல் ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாக தீர்க்கப்படும் என்ற உறுதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசு வழங்கியிருந்தது.

இந்த உறுதிமொழி குறைந்தது மூன்று தடவை இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. அதில் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அடையும் நோக்கில் 13ஆவது திருத்தச் சட்டம் மேலும் கட்டியெழுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான நடைமுறையாக்கம் என்பது தேசிய மொழியான தமிழ் மொழியின் முழுமையான நடைமுறையாக்கத்தையும் உள்ளடக்குகின்றது.

2015ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தை அரசியல் சாசன சபையாக மாற்றும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளடங்கலான அனைத்துக் கட்சிகளின் பங்குபற்றுதலோடு வழிகாட்டல் குழு மற்றும் ஏனைய உப குழுக்கள் இது தொடர்பில் அநேக காரியங்களை முன்னெடுத்து வந்துள்ளன. இந்த நாட்டின் நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கில் இந்த நடவடிக்கைகளில் நாம் பூரணமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தோம்.

இந்த அரசுக்குச் சார்பாகச் செயற்படும் அநேகர் சிங்கப்பூரானது எவ்வாறு தம் மக்கள் மத்தியில் தேசிய நல்லிணக்கத்தையும் செழிப்பையும் அடைந்துள்ளது எனக் கூறுவதை அவதானித்துள்ளேன். நாம் விரும்புவதை மாத்திரம் பொறுக்கிக்கொள்ளாமல் இருப்போமேயாகில் சிங்கப்பூர் ஒரு நல்ல உதாரணம்.

நவீன சிங்கப்பூரின் தந்தை என அழைக்கப்படும் லீ குவான் யூ வின் அறிவுரைக்கு செவிமடுப்பது சாலத் தகுந்தது எனக் கருதுகிறேன்.

"பிரிட்டனின் மாதிரி பொதுநலவாய நாடு இலங்கை ஆகும். சுதந்திரத்தை நோக்கி மிக அவதானமாகத் தயார்படுத்தப்பட்ட ஒரு நாடாகும். போரின் பின்னர் 10 மில்லியனுக்கும் சற்றுக் குறைவான மக்களைக் கொண்ட ஒரு நடுத்தரளவிலான ஒரு நாடாகும். 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது சுதந்திரத்தின் பரிணாம வளர்ச்சிக்கு மிக துல்லியமான ஒரு மாதிரியாக அது விளங்கியது. ஆனால், அது அவ்வாறு செயற்படவில்லை. ஒரு வளமிக்க நாடு வீணாய் போய்க்கொண்டிருப்பதை எனது விஜயங்களின்போது நான் கண்டேன். ஒரு மனிதன், ஒரு வாக்கினால் ஒரு அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. 8 மில்லியன் சிங்கள மக்கள் 2 மில்லியன் தமிழ் மக்களை தேசிய மொழியான ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாறும்படிக்கு வாக்குகளினாலே தோற்கடித்தார்கள். இது தமிழ் மக்களுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. எந்தவொரு அரச மதமும் இல்லாமல் இருந்த ஒரு நாட்டிலே சிங்களவர்கள் பௌத்த மதத்தை தேசிய மதமாக மாற்றினார்கள். இதனால் தமிழர்களும் இந்துக்களும் நிராகரிக்கப்பட்டதை உணர்ந்தார்கள்" என்று நவீன சிங்கப்பூரின் தந்தை என அழைக்கப்படும் லீ குவான் யூ தெரிவித்திருந்தார் - என்றார். (அ.எ-22)

## கிணற்றில்...

யில் நடந்துள்ளது. அதேபகுதியைச் சேர்ந்த சுசீந்திரன் எட்வின் சாமுவேல் (வயது-7) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சிறுவன் உணவருந்தி விட்டு வெளியே சென்றுள்ளான். சிறிது நேரத்தின் பின்னர் சிறுவனைத் தேடியபோது பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. சிறுவன் தவறிக் கிணற்றுக்குள் விழுந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26,9)

## மருத்துவர்...

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று உஹன பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நடைபெறவிருந்த ஒரு போட்டியில் கலந்துகொள்ளும் நோக்கில் மருத்துவச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள மாணவிகள் குறித்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தனர்.

அப்போதே இந்த மருத்துவர் நான்கு மாணவிகளை பாலியல் ரீதியாக வன்கொடுமை செய்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாணவிகள் தமது வகுப்பாசிரியர் ஊடாகப் பொலிஸாரின் கவனத்துக்கு இதைக் கொண்டுசென்றிருந்தனர். இந்த நிலையில் மருத்துவர் கைதுசெய்யப்பட்டார். மருத்துவரைப் பொலிஸார்கைதுசெய்து அழைத்துச் செல்லும்போது அவர் கைக்குட்டையால் தனது முகத்தை மறைத்தவாறு சென்றார். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் மருத்துவர் முற்படுத் தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் பரவியதையடுத்து அங்குள்ள மக்கள் மருத்துவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து மருத்துவமனை வாசலை முற்றுகையிட்டனர். அதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் பொலிஸார் நிலைமையைச் சுமுக நிலைக்குக் கொண்டுவந்தனர். பாதிக்கப்பட்டனர் என்று கூறப்பட்ட மாணவிகள் மருத்துவ பரிசோதனைக்காக அம்பாறை பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

## ஷானி...

நடைமுறைக்கு வரும் வகையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடினார் என்று கூறப்படும் உரையால் ஒன்று தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் அடிப்படையில் அவர் பதவி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலான தொலைபேசி உரையாடல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுடன், ஷானி அபேசேகரவின் உரையாடல் என்று கூறப்படும் உரையாடல் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றினார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அவருக்கு பதவியிறக்கத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டு காலி பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்த இடமாற்றத்துக்கு எதிராக ஷானி அபேசேகரா மேன்முறையீடு செய்திருந்தார். (எ)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1636 சீட்டிழுப்பு திகதி 07.01.2020
வெற்றி இலக்கங்கள் 05 20 50 60 F
ரூ. 44,118,240/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.01.2020 வெற்றி வாரம் 2731 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 09 13 32 53
ரூ. 2,722,444/=

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 845
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,832,505/-
வெற்றி இலக்கங்கள் 06 15 46 51 S

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1105
சீட்டிழுப்பு திகதி 2020.01.06 திங்கட்கிழமை
U 22 34 42 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,768,392/-

# அணித் தெரிவு நாளைமறுதினம்

யாழ்ப்பாணம்.ஜன.8
யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்துக்கான 20 பந்துப் பரிமாற்றத்திற்கான அணி மற்றும் 50 பந்துப் பரிமாற்றத்திற்கான அணித் தெரிவு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
எனவே இதுவரை கழகங்களின் வீரர்களின் பதிவுகள் ஒழுங்கு முறைப்படி சமர்ப்பிக்காத அணிகள் வெள்ளிக்கிழமை வரை எமது அலுவலகத்திலோ அல்லது செயலரிடமோ ஒப்படைக்க முடியும் எனவும் வீரர்களின் பதிவுகளை தங்களின் கழகத்தின் (லெட்டர் ஹெட்) இல் பதிவு செய்து ஒப்படைக்குமாறும், அணித் தெரிவுக்கு வருகின்ற வீரர்கள் துடுப்பாட்டம் செய்வதற்கான பொருட்களை கொண்டு வருதல் அவசியம் என யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தெரிவுக் குழுத்தலைவர் இ.பாலமுரளி தெரிவித்துள்ளார். (23)

## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்.ஜன.8
தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்பு ஆண்டுக்கான விளையாட்டு போட்டிவரிசையில் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நகுலகிரி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

★ ★ ★



ஆண்களுக்கான கபடிப் போட்டித் தொடரில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நகுலகிரி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 47:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23)

★ ★ ★



பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரில் நகுலகிரி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
நகுலகிரி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 24:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23)

# பாடும்மீன் அசத்தியது

யாழ்ப்பாணம், ஜன.8
யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்பு ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான கபடிப் போட்டித் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வசந்தபுரம் விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 48:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (23)



# அரையிறுதிக்குள் இமையாணன் மத்தி

கரணவாய், ஜன.8
பரபரப்பான ஆட்டத்தில் சமனிலை தவிர்ப்பு உதைமூலம் மனோகரா விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம்.
சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தின.
இரு அணியினரும் இளம் வீரர்களுடன் களமிறங்கியதால் ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை பரபரப்புக்கு பஞ்சமே இல்லை. பரபரப்பாக இடம்பெற்ற முதல் பாதியாட்டத்தின்10 ஆவது 14 ஆவது நிமிடங்களில் இமையாணன் மத்தி சார்பாக அனோஜன் மற்றும் சது ஆகியோர் கோல்களைப் பதிவு செய்தனர்.
முதல் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி வீரர் சாருஜன் கோல் ஒன்றைப் பதிவு செய்ய முதல் பாதி ஆட்டத்தில் 2:1 என்ற கணக்கில்இமையாணன்மத்திமுன்னிலையில் காணப்பட்டது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் பரபரப்பாக செயற்பட்ட மனோகரா வீரர்கள் அடுத்தடுத்து 2கோல்களைப் போட ஆட்டம் சூடுபிடித்தது. இந்த நிலையில் ஆட்டம் நிறைவடையும் நேரம் நெருங்க மனோகராவுக்கே வெற்றி என்ற நிலையை மாற்றி அபாரமான கோல் ஒன்றைப் போட்டு ஆட்டத்தை சமனிலைப்படுத்தினார் இமையாணன் மத்தியின் முன்கள வீரர் சாரு. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஜன.8
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடந்துவரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நிக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.(23)


★ ★ ★

யாழ்ப்பாணம்.ஜன.8
சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று புதன் கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் அரையிறுதி யாட்டத்தில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23-108)

★ ★ ★

யாழ்ப்பாணம்.ஜன.8
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# இங்கிலாந்து அணி அபார வெற்றி



பென்ஸ்ரோக்கின் அதிரடியான ஆட்டம், அபாரமான பந்து வீச்சால் தென்னாபிரிக்காவை சொந்த மண்ணில் 189 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி. இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 4 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், 2 ரி-20 போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 269 ரன்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா அணி 223 ரன்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணி சார்பில் எல்கர் 88 ரன்களையும், வான் டீ டுசன் 68 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அன்டர்சன் அதிகபட்சமா 5 விக்கெட்டுக்களைச் சரித்தார்.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 391 ரன்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணி சார்பில் சிப்லி ஆட்டமிழக்காமல் 133 ரன்களையும், பென்ஸ்ரோக்ஸ் அதிரடியாக ஆடி 47 பந்துகளில் 72 ரன்களையும், அணித் தலைவர் ரூட் 61 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

437 ரன்கள் பெற்றால் வெற்றி என தனது இரண்டாம் இன்னிங்ஸுக்காகக் நேற்றுமுன்தினம் களமிறங்கியது தென்னாபிரிக்கா அணி. அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து 126 ரன்களை எட்டியது. மாலன் 63 ரன்களுடனும், மகாராஜ்ரா 2 ரன்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். மகாராஜ்ரா அதே ஓட்ட எண்ணிக்கையுடன் நேற்றைய நாளில் எல்.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் இணைந்த அணித் தலைவர் டி குக் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். மாலன் 88 ரன்கள் பெற்று ஆட்டமிழந்தார். பின்னர் அணியின் ரன் விகிதம் குறைவடைந்தது. அணி 248 ரன்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ரன்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் பென்ஸ்ரோக்ஸ் 3 விக்கெட்டையும், டென்லி, அன்டர்சன் தலா 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி வீரர் பென்ஸ்ரோக்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# யுனிபைட் வி.க. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜன. 8

தமிழ் தேசிய மக்கள் முன்னணி வவுனியா உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியோடு நடத்திய மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கால்பந்தாட்ட சுற்று போட்டித் தொடரில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. யுனிபைட் விளையாட்டுக் கழக அணி சார்பாக சஞ்ஜய் ஒரு கோலைப் பதிவு செய்தார். (23)

# 4 நாட்கள் டெஸ்ட் போட்டிக்கு தென்னாபிரிக்கா ஆதரவு

டெஸ்ட் போட்டியை நான்கு நாட்களாக குறைக்கும் ஐசிசி பரிசீலனைக்கு தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஐசிசி தொடர்களுக்கு நெருக்கடி இல்லாமல் நாட்கள் எளிதாக கிடைப்பதற்கும், வருமானத்திற்காக அதிக அளவில் சர்வதேச தொடர்களை நடத்துவதற்காகவும் ஐசிசி ஐந்து நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியை நான்கு நாட்களாக குறைக்க பரிசீலனை செய்து வருகிறது. அடுத்த ஐசிசியின் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் நடைமுறைபடுத்தப்படும் என தெரிவித்தது.

ஐசிசியின் இந்த முடிவுக்கு கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் மூன்று சபைகளில் ஒன்றான இங்கிலாந்து கிரிக்கெட் சபை உடனடியாக ஆதரவு தெரிவித்தது. ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை தீவிரமாக ஆலோசித்து வருகிறது. பிசிசிஐ தலைவர் கங்குலி, ஐசிசியின் பரிசீலனையை முழுவதுமாக பார்த்த பின்னர் பதில் அளிக்கப்படும் எனத் தெரிவித்தார். ஆனால், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சச்சின், விராட் கோக்லி உள்ளிட்ட முன்னணி ஜாம்பவான்கள் நான்கு நாள் டெஸ்ட் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதற்கிடையில் தென்னாபிரிக்கா ஐசிசி முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்பட்டது. இந்த நிலையில் அந்த செய்தி பொய்யானது. நாங்கள் அதற்கு ஆதரவு அளிக்கிறோம் என்று தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்கா அணி ஏற்கனவே சிம்பாப்வே அணிக்கெதிராக நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியில் பரீட்சார்த்த முறையில் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து வீரர் பேர்ன்ஸ் நீக்கம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோரி பேர்ன்ஸ் இலங்கைக்கான சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள மாட்டார் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இங்கிலாந்து அணியின் இரண்டாவது டெஸ்ட் போட்டியை முன்னிட்டு, பயிற்சியில் ஈடுபட்ட போது காயமடைந்தார்.

இதன் காரணமாக கடந்த திங்கட்கிழமை லண்டனில் ரோரி பேர்ன்ஸின் கணுக்காலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், அவரை நான்கு மாதங்கள் வரை ஓய்வில் இருக்குமாறும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதனால் மார்ச் மாதம் இலங்கை அணியுடன் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரில் அவர் பங்கு கொள்ள மாட்டார் எனவும் ஐ.சி.சி. சுட்டிக்காட்டியுள்ளது.

மார்ச் மாதம் இலங்கை வரும் இங்கிலாந்து அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

முதல் போட்டி மார்ச் மாதம் 19 - 23 ஆம் திகதி வரையும், இரண்டாவது போட்டி 27 - 31 ஆம் திகதி வரையும் நடைபெறும்.



# ஆஸி. முன்னாள் பயிற்றுவிப்பாளரின் டுவிட்டர் பக்கம் 'ஹக்'

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ப்யிற்றுவிப்பாளர் டரென் லேமன் டுவிட்டர் பக்கத்திற்குள் ஊடுருவிய இனந்தெரியாத நபர் ஈரானிற்கு எதிரான கருத்துக்களை பதிவு செய்ததை தொடர்ந்து அவர் தனது டுவிட்டர் பக்கத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

பிரிஸ்பேர்ன் ஹீட் அணியின் பயிற்றுவிப்பாளராக உள்ள லேமன் பிக்பாஸ் லீக் போட்டியில் தனது அணி தோல்வியடைந்தமை குறித்து கவனம் செலுத்திக் கொண்டிருந்தவேளை இந்த சம்பவம் இடம்பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்திற்குள் ஊருடுவிய நபர் ஈரானிற்கு எதிரான பதிவுகளை வெளியிட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் பி.பி.எல். போட்டியில் விளையாடிக் கொண்டிருந்த வேளை எனது பக்கத்தை யாரோ ஹக் செய்தார்கள் தீங்கிழைக்கும், புண்படுத்தும் அறிக்கைகளை வெளியிடுவதற்கு அதனை பயன்படுத்தினார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

என் பெயரில் பயங்கரமான மோசமான கருத்துக்கள் வெளியானமை எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் மிகுந்த மனக்குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக சமூக ஊடகங்களில் இருந்து வெளியேற தீர்மானித்துள்ளேன். டுவிட்டர் தனது பிரச்சினைக்கு தீர்வை கண்டுள்ளது. அந்த பதிவுகள் அகற்றப்பட்டுள்ளன. டுவிட்டர் பக்கத்திற்குள் ஊருடுவிய நபர் ஈரான் விடயத்தில் நான் டிரம்பினை முழுமையாக ஆதரிக்கின்றேன்- என்றார்.

ஈரான் நாட்டு இராணுவத் தளபதி அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்கு இடையில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு எதிரான தொடரை எதிர்பார்த்து கொண்டிருக்கின்றேன்

## டிம் பெய்ன் கர்ச்சிப்பு



இந்திய அணி கடந்த முறை எதிர்கொண்ட ஆஸ்திரேலிய அணியில் இருந்து தற்போதுள்ள அணி முற்றிலும் மாறுபட்டது என டிம் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி கடந்த 2018ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஆஸ்திரேலிய அணியில் டேவிட் வோர்னர், சிமித் ஆகியோர் இல்லை. தற்போது அவர்கள் அணிக்கு திரும்பியுள்ளனர். அதேவேளையில் 3ஆவது இடத்திற்கு மார்னஸ் லாபஸ்சான்னே கச்சிதமாக பொருந்தியுள்ளார். பந்து வீச்சில் பேட் கம்மின்ஸ் மிகமிக உட்சத்தில் இருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இரண்டு டெஸ்டிலும், நியூசிலாந்துக்கு எதிராக மூன்று டெஸ்டிலும் விளையாடிய ஆஸ்திரேலியா அணி இரண்டு அணிகளையும் ஒயிட் வாஷ் செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் ரி-20 உலகக் கிண்ணத் தொடர் முடிந்த உடன் இந்திய அணியுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறோம். நாங்கள் தற்போது இரக்கமற்ற அணியாக திகழ்கிறோம். இந்தியா தொடரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று ஆஸ்திரேலிய டெஸ்ட் அணி கேப்டன் டிம் பெய்ன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த கோடைக்காலத்தில் ஐந்து போட்டிகளையும் வெல்வோம் என்ற எதிர்பார்ப்புடன் வந்தேன். நாங்கள் ஓர் அணியாக ஒன்றிணைந்து உண்மையிலேயே தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம் என நம்புகிறேன். பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் அதிகமான மேட்ச் வின்னர் வீரர்களை பெற்றுள்ளோம். கடந்த 12 மாதங்களில் சுமாராக விளையாடிய வீரர்கள் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

நாங்கள் விரும்பிய வகையில் தற்போது மிகவும் இரக்கமற்ற அணியாக மாறியுள்ளோம். எங்கள் அணி முழுவதும் தரமான வீரர்கள்.

கடந்த முறை விளையாடிய ஆஸ்திரேலிய அணியை விட இந்தியாவுக்கு எதிராக விளையாட உள்ளது முற்றிலும் மாறுபட்ட அணி-என்றார்.

**வாடகைக்கு**

நல்லூரில் தனியறை, இணைந்த குளியலறை, சிறிய சமையலறை, ஹோல் உடன் அனெக்ஸ் பெண்களிற்கு மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 070 2877 082

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள தனியார் பிறிண்டேர்ஸ் ஒன்றுக்கு வெல்டிங் வேலைக்கு உதவியாளர் தேவை.

[பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்]

வயது 18-25 யாழ் நகரை அண்டியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 978 5717

**தேவை**

பாவித்த நல்ல நிலையில் உள்ள

சொட்டு நீர்ப்பாசன குழாய்தொகுதி தேவை.

077 871 2347

**கணக்காளர் தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான பிறிண்டேர்ஸ் ஒன்றுக்கு பெண் கணக்காளர் தேவை.

யாழ் நகரில் உள்ளவர் தொடர்பு கொள்ளவும்.

077 978 5717

**தேவை**

களஞ்சிய காப்பாளர்

(சாரதி அனுமதிப்பத்திரத்துடன்) ஆண்

விற்பனை உதவியாளர்

(சாரதி அனுமதிப்பத்திரத்துடன்) ஆண்

021 205 2200, 075 978 9223

**புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும்**

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் அரச திணைக் களங்களில் கணினிப் பயிற்சியை வழங்கிய யாழ். MCS IT CAMPUS நிறுவனம். தனது 20 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வடபிராந்திய தகவல் தொழில்நுட்ப சம்மேளனததுடன் இணைந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும் வழங்க தீர்மானித்துள்ளது.

Bachelor in Information Technology (BIT) கொழும்பு பல்கலைகலைக் கழகம். CIMA UK. Computer Engineering – USA. மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற CAA மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பயில அரிய சந்தர்ப்பம்.!

100% இலவச கற்றலுடன் முழுநேர தொழில் பயிற்சியும் வழங்கப்படும்.!!

புலமைப்பரிசில்கள் க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஏனையவர்களுக்கு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் அடிப்படையிலும் வழங்கப்படும்!!!

புலமைப்பரிசிலிற்கு உங்கள் பெயர் முகவரி பிறந்த திகதி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு sms செய்யவும்.

(in.12235) (13.17)




# இந்திய அணி இலகு வெற்றி

விராட் கோக்லியின் அதிரடியால் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்றது.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குணதிலக, அவிஸ்க களமிறங்கினர். இருவரும் ஆரம்பத்தில் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் அணி 38 ரன்கள் பெற்ற போது முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. அவிஸ்க 22 ரன்னுடன் பவிலியன் திரும்பினார். பின்னர் களமிறங்கிய குசல் பெரேரா குணதிலகவுடன் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் அணியின் வீரர்கள் எவரும் 35 ரன்னை எட்டவில்லை. அதிகபட்சமாக குசல் பெரேரா 34 ரன்னை பெற்றார். அணி நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 142 ரன்னை மட்டுமே பெற்றது.



இலகு இலக்கை நோக்கிக் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ராகுல், தவான் அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். அணி 71 ரன்களைப் பெற்ற போது முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. அணி 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியை எட்டிப் பிடித்தது. அணித் தலைவர் கோக்லி அதிரடி காட்ட அணி 17.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் நவ்டீப் சய்னி தெரிவு செய்யப்பட்டார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.